கலா நிலயம்

V 4 No.30 30 July 1931

JL
ஈ211, N28KN
1N31·4·30.
188928.

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4.] 1931 ஞ ஜுலை மீ 30உ [No. 30.

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader)	581
2.	நவராத்திரி — ஓர் நாடகம். K. N. சுந்தரேசன் B. A. (Hons)	583
3.	சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-62—69) K. இராமரத்நம் ஐயர் B.A.	585
4.	ஊழ்வினையும் ஆள்வினையும். K. நாராயண ரெட்டிகாரு	587
5.	அப்பர் (64-கலைகள் - அதிரிசயம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L.	588
6.	யாப்பிலக்கணம் (குறள், சிந்தியல், வெண்பா)	590
7.	பெண்களின் பேதமை S. இராமசந்திரன் B. A.	592
8.	கம்பராமாயணம் (நகர்நீங்கு படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L.	594
9.	வர்த்தமானம்.	599

கலாநிலயம்

அருமையினு மருமை.

4

188928

தாமும் நல்லவர்களாகி மற்றவர்களையும் நல்லவர்களாக்க நாடாது சனங்களிற் பலர் தீமைகளைத் தீர்ப்பதற்கே முயன்றுவருவதன் நுண்ணிய காரணங்கள் சிலவற்றைச் சென்றவாரம் செப்பினோம். தீண்டாமை, கள்ளுண்ணல் முதலியவைகளுக் கெதிராய்ப் போர்தொடுத்து ஆரவாரம் புரிவதெல்லாம், பார்ப்பதற்குப் பெரிதும் பகட்டா யிருக்கலாமாயினும், உண்மையில், நம்முடைய கடைமைகளின் முன்னணியைச் சேர்ந்தவைகளாகா. வெறுப்பொடு பொறாமையும் வஞ்சினமும் தொடுத்தெய்யும் படைக்கலங்கள் பல தருமவேடம்பூண்டு இச்சீர்திருத்தக் களங்களினிடையே கையாளக் கிடைக்கின்றன. தலைகீழாகிய வீண் அவாக்களின் விளையாட்டிடமென்றும் இதனைக் கூறலாம். பொறாமை சிறிது அதிகமாயும் படபடப்புச் சிறிது குறைவாயு மிருக்குமானால் எல்லோரு மெங்கும் நல்லவர்களாதற்குரிய வழிகளை நாடுகின்ற நினைவு நேராமற் றீராது. இல்வாழ்க்கையில் முட்டிமுட்டிப் புரியும் சண்டைகளாலும், பொதுவாழ்க்கையில் அயலார் தீமைகளென்று ஆதரித்துப் புரியும் ஆரவாரங்களாலும், வெட்டிச் சின்னபின்னமாக்குகின்ற 'சிக்கலான' முடிச்சுக்கள் பலவற்றை நம் பரிவுடைய விரல்களால் மெல்லமெல்லப் பிரிக்கப் பயில்வோமெனின் எண்ணரிய பெருநலங்கள் நம்முடைமை யாகாவோ !

இதனை நினைவிற்கொண்டு மனிதர்தம் செய்கைகளைச் சிந்தித்துப் பார்க்குங்கால் உருப்பெறுஞ் சித்திரம் எத்தகைத்து! உண்மையாய நன்மையின்பொருட்டு எத்துணைச் சிறிதே முயன்றிருக்கின்றோம்—அதன் பயனும் எத்துணை எத்துணைச் சிறியது. முன் விரைந்து ஏகவேண்டிய வேளைகளில் எத்துணைமுறை பின்தாழ்ந்து நின்றுவிட்டோம். பின்தயங்கி நிற்க வேண்டிய செவ்விகளில் எத்துணைமுறை முன்விரைந்து நாம்விழுந்துவிட்டோம்—நாள்தோறும்நாள்முழுதும் அன்புநெறிக் கப்பா லாகாதார் எத்தனைபேர்? தீமைகள் புரியாமல் அன்பும் அறனுமுடைய நல்லவர்களாய் வாழ்தலின் நோக்கம் யாதென்று வினவவே வேண்டா. தருமத்தின் பெருமையைப் போதிப்பார் "அன்பும் அறமும் உடையவனாய் வாழ்ந்தால்தான் உனக்குச் சுகமுண்டு; இல்லையேல் எந்நாளும் சுகமில்லை" என்றெடுத் தியம்புவார். இவர்களது கருத்தின்படி சுகமும் அறமும் காரியகாரணமுறையில் நிற்கின்றன. வழக்கிற்கிடமான செய்தி இதனைவிட வேறிலது. அறத்தின்காரியம் சுகமாவது சிறிதேனும் இயலாது. நம்முடைய சுகம் ஒருபோதும் நமது கையிலில்லை. நம்முடைய உடல்நிலையோ நம்மைப் பெற்றவர் அளித்தபடி அமைந்திருக்கும். நம்முடைய சத்துருமித்துருக்களுக்கு இலக்காகி நிற்கின்றோம். தீராநோயால் பீடிக்கப்படலாம் நாம்; மிகச் சிறு துன்பத்தையுந் தாங்கமாட்டாததா யிருக்கலாம் நமதுடல். இளிவர நம்மை நோக்கினாலும் சிறுசொல்லொன்று பிறர்சொன்னாலும் என்றும் ஆறாதுகொதிக்கின்ற உணர்வு மிகவுடையவர்களாகலாம். நம்மை மதியாதாரிடையே நாம் நடமாட வேண்டியநிலை வந்தெய்தலாம். புண்பட்ட மனத்தில்

கோலிடுபவர் பற்பலர். இவையனையவை எத்தனையோ நம்முடைய சுகத்தைச் சிதைப்பதற்குக் காத்துக்கிடக்கின்றன. இவைகளுக்கு இலக்காகாமல் நம்முடைய முயற்சியால் தப்புவது அரிது. இத்தகைய நிலைகளில் நம்முடைய அறமும் அன்பும் வந்து நமக்கு உதவமாட்டா. இவ்வுதவி செய்யவேண்டு மென்பது அவைகளின் தொழிலுமன்று. அன்பிற்கும் அறத்திற்கும் ஓர் ஊதியமில்லை. அவை தமக்குத்தாமே ஊதியம் (Virtue is its own Reward) என்னுமிம் மூதுரையும் நேரிதன்று. இவ்வுலகத்தின்கண் ஒருவித ஊதியமும் இல்லாதன அன்பும் அறனுமாகிய இவைகளே. ஆதலாற்றான் இவைகளிற் சிறந்தது வேறொன் றிலது. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது," என்றார் வள்ளுவர்; அவ்வளவே. அன்பிற்கும் அறத்திற்கும் உரிய பயன் இதுவென்று இயம்பியதன்று இக்குறள். கணவனும் மனைவியும் அன்புடையராயிருப்பதைக் காரணமாகவும் அதனால் விருந்தோம்பல் முதலிய அறங்கள் நடைபெற இயல்வதாவதைக் காரியமாகவும் பரிமேலழகர் கூறிய உரையே வள்ளுவர்கருத்திற் கிணங்கியதாகும். "இல்வாழ்க்கையாகிய நிலை யாவர்மாட்டும் அன்பு செய்தலையும் அறஞ்செய்தலையும் உடைத்தாயின், அதற்குக் குணமாவதும் பயனாவதும் அவ்விரண்டினையும் உடைமைதானே" என்ற மணக்குடவர் உரையில், காரணத்தையே காரியமாக்குகின்ற கருத்துத் தென்படுகின்றது. "பயன் வேறு வேண்டா, தனக்கும் பிறர்க்கும் உண்டான முகமலர்ச்சிதானே யமையும்" என்று இவ்வுரையாசிரியர் காட்டும்போது ஒரு பயன் இல்வாழ்க்கைக் குளதென்று உணர்த்த நேர்கின்றனர். வருந்திவந்தோர் திருந்துமுகங் கண்டு இவர்முகம் மலர்தல் என்னுங்கால் தற்பயன் குறிக்கப்படுகின்றது. ஆதலின் அன்பிற்கும் அறனிற்கும் ஊதியம் இம்முகமலர்ச்சி, என்னுமிக் கொள்கை தூய்மையிற் குறையாத பெருமையுடைய தேனும், இவ்விதம் ஒருபடி விட்டுங் கூட அன்பிற்கும் அறத்திற்கும் ஊதியங் காட்டமாட்டார் வள்ளுவர். "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்னுங் குறளில் இல்வாழ்க்கை யென்னுந் தொழில் யாதெனச் செப்புகின்றாரன்றி அதன்பயன் ஈதெனக் குறித்தவரல்லர். "எனவே, வேளாண்மை செய்யாவழி இல்லின்கண் இருத்தலும் பொருள்செய்தலுங் காரணமாக வருந் துன்பச்செய்கைகட் கெல்லாம் பயனில்லை என்பதாம்" என்னும்பரிமேலழகர், இவர்படுந் துன்பம் பிறர்க்குப் பயன்படாமற் போயிற்றே, என்றே காட்டுகின்றாராதலின் தற்பயன் என்பது அங்குந் தோற்றவில்லை. அறத்தின் ஒன்றாகிய ஈகையைப் பற்றிச் சொல்லவந்த வள்ளுவர், "ஈத்துவக்கு மின்பம் அறியார்கொல் தாமுடைமை வைத்திழக்கும் வன்கணவர்" என இயம்பிய குறளில், 'இன்பமும்' என இழிவுசிறப்பும்மை தொக்கு இருக்கின்றதெனக் கொள்ளவேண்டும். ஈகையை ஈகைக்காகவே புரியத்தெரியாதார், அதனால் வரும் இன்பத்தையேனும் அறிந்து இரண்டாந் தரமாக அதன் பொருட்டேனும் ஈதலாகாதா, என்பது இதன்கருத்து. "ஈதல் இசைபடவாழ்தல் இதுவல்லது ஊதியம்இல்லை உயிர்க்கு" என்றகுறளில், உயிரின்ஊதியம்ஈதலேயன்றி, ஈதலின் ஊதியம் புகழன்று என்னும் நுண்ணிய உண்மை அடங்கியிரு[...] இவ்விதம் [...]களில் வேறோரிடத்தில் விரிவாக விளக்கப்பெற்றிருக்கின்றதாதலின் இவ்வயின் அதனை உரையாமல் விடுகின்றோம். "அறத்தான் வருவதே இன்பம், மற்றெல்லாம் புறத்த புகழுமில" என்னுங்குறளில் அப் புகழ் இழிவும்மை பெற்றிருப்பதுங் கருதத்தக்கது. இனி இக்குறளினின்று நாம் கருத்துட்கொள்ள வேண்டியது வேறொன்று முளது. அறத்தான் வருவதே இன்பம், என்றதால், அறத்தால் இன்பமே வரும் என்னப் பிரிநிலை ஏகாரத்தை நாம் பிரித்துக்கூட்டிப் பொருள் கொள்ளலாகாது. இன்பம் வருவதாயின் அது அறத்தாலேயே வரக்கூடுமே யல்லாது மறத்தால் வருவதென்பது ஒரு போதுமில்லை என்பதை மட்டுமே தெளிவிக்கின்றது இக்குறள். இதனால் அறத்தால் இன்பமே வரும் என்று எண்ணற்கு இடமில்லை.

ஆதலின், அன்பும் அறமுமுடையவர் எப்போதும் சுகமாய்வாழலாம் என்ற சொல் செல்லாது. கடலோ ஒருநாளுந் தன் அலை அடங்கப்பெறாது. அவ்வண்ணமே, அல்லலென்பது ஒய்ந்த வாழ்க்கை யார்க்கும் வாய்த்தலென்பது அருமையினு மருமை. எனின், "அன்பும் அறமும் உடையையாயின் உனக்குச் சுகமே வாய்க்கும்" என்றதைநம்பி நடப்போர், சுகமிழந்து அலைக்கப்படுங்கால், அன்பையும் அறனையும் 'சீ' என்று கையுதறி ஓட்டிவிடநேரும். இவ்வாறன்றி, தாமஸ் கார்லைல் என்னும் ஆங்கிலப் பேறிஞர் கட்டுரைத்தபடி (இதனை, 1-வது வால்யூம், 16-வது பக்கத்தில் மொழிபெயர்த்துத் தந்திருக்கின்றோம்) சுகமென்பதைப் பற்றிச் சிந்திக்கவேனும் பயிலாது விவகரிப்போமாயின், அன்பையும் அறனையும் எவ்விடர்க்கிடையேயும் ஒருநாளுங் கைவிடாத வீரர்களாவோம். மனச்சாக்ஷி யொன்றிருக்கின்றவரையில் சுகமென்பது சித்தித்தல்இயலாது. வேண்டுவது சுகமாயின் மனச்சாக்ஷியை முதலில் நையப் பிசைந்து தின்றுவிடவேண்டும். சட்டத்தின் தண்டனைக்கு ஆளாகாமல் தப்புவதும், நோயின் கொடுமையை ஆற்றுவதும், பசியின்றிப் புசிக்கும்வகை தேடிக்கொள்வதும், விவாகவயதையும் மக்கள்கணக்கையும் வரையறுப்பதும், போன்றவைகளால் ஒவ்வோர் துன்பத்தைத் தணிக்க நேர்வதெல்லாம் சூழ்மதியின் தந்திரங்களேயன்றி, அன்பினையும் அறத்தினையுஞ் சார்ந்த செய்திகளாகா.

சுகம் என்னுமிது யாவதாயினுமாகுக. சுகதுக்கங்களே இல்லை யென்பர் ஞானிகள். சுகமென்பது முன்னூழினால் விளையுமேயன்றி உன் செயலால் எய்தாதென்பர் கர்மவாதிகள். ஆவதாகுக. இவ்வாழ்க்கையில் தனக்கெவ்விதச்சுகமும் ஒருவனும் ஒருபோதும்எதிர்பார்க்கலாகா தென்பதையே இங்கு வற்புறுத்துகின்றோம். சுகமொன்று வருமாயின் மகிழ்ந்தனுபவிக்கட்டும். அதனையும் வேண்டாவென்று விலக்குதற்கு இங்கு யாரும் புகுந்ததில்லை. மனிதன் இங்குச் சிறிதும் சோர்விலாது ஆற்றவேண்டியது அவன் கடமையேயாகும். எக்கடமையை ஏன் ஆற்றவேண்டுமென்பதை அவன் அறியான்; அறியவேண்டிய அவசியமுமில்லை. எக்கூலிக்குக் கடமை புரிகின்றான் என்பது அவனுக்குத்தெரியாது; கேட்கவும் படாது. நல்லனாய் இருக்கவேண்டுமென்பதே அவனுக்கு முதலும் முடிவுமாகும். நன்மை என்பது இன்னதென்று அவனுக்கு நிச்சயமாய்த் தெரியாவிடினும், எப்படியோ தட்டுத்தடுமாறி [...] நல்லவனாயிருக்க முயலவேண்டும். மற்றவர்க்குச் சுகம் விளைவிக்கக்கூடியது எது என்பதை அவன் ஐயமற அறியானேனும், எவ்வகையிலாவது தட்டுத்தடுமாறி மற்றவரைச் சுகப்படுத்த முயல வேண்டும். கடல், தான் ஓயாமல் அலைப்புண்டிருக்கின்றதேனும், அயல்வந்து நிற்போரைத் தன் குளிர்ந்த காற்றினால் களைதீர்க்கின்றது; தானே சென்று மழையாகப் பெய்து மற்றவரை அளிக்கின்றது. அன்பும் அறனும் தம்முடைய உயிரிற்குரிய நாடிகளாகத் துடிக்கப் பெற்றவர்களே இத்தகைய வீரராவார். இது தேசபக்தி முதலிய இயக்கங்களால் போதித்து வைப்பதற்குரியவோர் சூரமன்று. சூரம்வேறு, வீரம் வேறு. சூரத்தை ஊட்டலாம்; வீரமோ இரத்தம்போற் சுரத்தல் வேண்டும். அறுசுவையுண்டி குருதியாய்த்திரிந்துடலைவளர்ப்பதேபோல், அன்பும் அறனுமுடைய வாழ்க்கையின் வீரம் சுரப்பதற்கு ஆதாரமாயிருப்பன ஒன்பான் சுவையுடைய உயரிய காவியங்களே. அருமையினு மருமையாயிருப்பன சிலவற்றை இங்குக் குறித்தோம். இவ்வுண்மையைச் சனங்கள் உணர்ந்து கொள்வதும் அருமையினு மருமையாதல் வேண்டுமோவென இடைவிடாது ஏங்கும் எம்நெஞ்சம்.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[565-வது பக்கத் தொடர்ச்சி]

குஞ்:—(கீழே புரண்டு) அம்மா எங்கே! இங்கே யிருக்கிறேன் என்றாளே, நீலப்புடவை கட்டிக்கொண்டு—என் காணோம்?

[விளக்கை எடுக்க, இடப்புறத்தி லோட]

காமா:—டே —மாயாண்டி— கலகக்காரா—திருப்படா திருகை! கையைச் சுட்டுவிடும் விளக்கு!

மாயா:—சாமியார் வருகிறார், வெளிச்சம் வேண்டாமா?

[துரைசிங்கன் இடப்புறத்திலிருந்து வருகிறான்]

காமா:—கிடைத்ததா?

துரை:—இதோ—இதனைச் சாறுபிழிந்து காய்ச்சித் தேன்கலந்து குடியுங்கள்! (காமுவிடம் தருகிறான்)

குஞ்:—எனக்கு எனக்கு? (ஓடிவருகிறாள்)

குரல்:—சாமியாரே, எனக்கும் அந்த மருந்து!

காமா:—உனக்கென்ன நோக்காடு?

குஞ்:—உனக்கென்ன சாக்காடா?

காமா:—அறைவேன் கன்னத்தில்!

குஞ்:—அம்மா இல்லையென்று இப்படி நீ செய்கிறாயோ—இதோ-(பிடுங்குகிறாள் மூலிகையை)

காமா:—ஐயையோ—பிடி! பிடி!! பிடி!!! மாயாண்டி!

மாயா:—(ஓடிவந்து) எனக்கும் தருகிறீர்களா?

காமா:—ஆகட்டும்!— பிடி அவளை —விடாதே.

குஞ்:—(ஓடிக்கொண்டே) தான் மருந்தருந்திப் பிழைக்க, நான் சாகவா?

(சுபத்திரை வலப்புறத்திலிருந்து ஓடுகிறாள்)

சுப:—சாகவா—பிடியுங்கள், கிணற்றில் விழப்போகிறாள்! எங்கெங்கெல்லாம் உன்னைத் தேடுகிறேன். (குஞ்சுவைப் பிடித்துக்கொண்டு) முகத்தைத் துடைத்து நெற்றிப் பொட்டு. இடுமுன் ஓடிவந்து விட்டாயே?

[உருமபிள்ளையும் ஓடிவருகிறான்]

உரு:—யாருன்னைச் சீண்டுகிறான்—துலுக்கனா?

காமா:—உருமபிள்ளை! குஞ்சு கையிலிருக்கும் மூலிகையைப் பிடுங்கு!

மாயா:—எனக்கு வேண்டும்!

குஞ்:—எனக்கு வேண்டும்!

காமா:—கிழவியென்று எனக்கன்றோ, மருந்து தந்தார் சாமியார்! சிறுவருக்கு அது நஞ்சாய்விளையாதோ.

உரு:—நான்மட்டும் குமரனோ?— சொல் - சுபத்திரை! எனக்கு வேணும்!...சாமியாரை நான்தான் அழைத்துவந்தேன்

சுப:—(வெட்கி ஒதுங்கி) எதற்காகச் சண்டை இப்படி? (சிரிக்கிறாள்)

துரை:— அதை—எல்லாருக்கும் தருகின்றேன்!— ஆனால் நாள்செல்லும்!

காமா:—குஞ்சு! பப்பம் தருகிறேனடி-தா அதை என்னிடம்!

உரு:—மோட்டாருக்கு வா—மாம்பழம், அனுசிப் பழம், ஆப்பிள், ஆரஞ்சு—பலவகைகளும் வைத்திருக்கிறேன்! தருகிறேன்—என்னிடம் தா...ஆப்பிளை சொர்க்கநாட்டுப் பழம் என்பர்.

சுப:—இந்த மாதம், மாம்பழக்காலமோ?—போய், குஞ்சு! போகாதே! சொர்க்கம் வேண்டாம் ஆப்பிளும் வேண்டாம்!

மாயா:—மரமேறி நான் பறித்துத்தருகிறேன், வா-இளநீர், நாவற்பழம், கொய்யாப்பழம்—சீதாப் பழம் இராமாப்பழம்...

சுப.—இராவணன்பழம்துரியோதனன்பழம் கூடத் தருவான்!

காமா:—சாந்தமாய்க் கேட்டால் தரமாட்டாள்—பிடுங்குகிறேன் பார்.

குஞ்:—இந்தா - இந்தா! உருமபிள்ளை.

காமா:—சரி - உருமபிள்ளையிடந்தானே கொடுத்தாய்!

சுப:—பாட்டியிடம் கொடுக்க வேண்டாமோ?—

மாயா:—பாட்டிக்காக அன்றோ சாமியார் கொணர்ந்தார்.

காமா:—அவன் எனக்காகத்தானே பரிந்துபேசினது?...கொடு அப்பா—போய்ச் சாறு பிழிகிறேன்? ...யாருக்காக இது—உனக்காகத்தானே! நான் இவனுக்குப் பரிந்துபேசி வேலையில் வைத்திருப்பதுபோல்

உரு:—எடுத்துக்கொள்ளுங்கள்(காமுவிடம் கொடுக்க)

சுப:—சரி—வா! நீ...

மாயா:—நிஜமாகவே தற்போது கிடைக்கும் பப்பம் பழம், கொய்யாப்பழம், சீதாப்பழம் வேண்டாமாம்—கிடைக்காத மாம்பழம், ஆப்பிள், அஞ்சி என்ற பேர்களுக்கே மயங்கினுள், அவனிடம்தான் கொடுத்தாள். பாருங்கள் சிறுபெண்!

காமா:—சாமியாரே— வருகிறேன் சீக்கிரம் இருங்கள்—கொஞ்சம்!

உரு:—ஏனடா பயலே, நான் பொய்யா சொல்லுகிறேன்—வா, மோட்டாரிடம் காட்டுகிறேன்...காட்டுமிராண்டியல்லவா நீ—நாட்டுப்பழங்கள் யாதறிவாய்!-

மாயா:—நான் ஒன்றையும் தொடவில்லையே!

உரு:—பின் யார் விளக்கை ஏற்றினது? நான் பொய்யனு நீ பொய்யனு?

மாயா:— (நடுநடுங்கி) அம்மா சொன்னுர்கள், விளக்கேற்றுடா என்ருங்க!

காமா:—ஆம்—சொன்னேன்...[உள்செல்கிருள்]

உரு:—தப்பினுய்!

சுப:—நாமும் போகலாம் வா? குஞ்சு! இது ஆடவரிடம்!

குஞ்:—பெண்கள் ஆண்வேஷம் போட்டுக்கொண்டிருக்கின்றனர்; அம்மா இப்போ வந்ததுபோல்!—அம்மா எங்கே?

காமா:—அந்தப் பழங்களைக் காட்டுகிறேன் என்றீர்களே, எங்கே காணும்!

உரு:—குஞ்சு—வா, பெண் சமத்து; அவர்களிடம் கொடுக்காமல் என்னிடம் கொடுத்ததற்காகத் தருகிறேன் வா. நான் சொன்னபடி செய்வேன்!—குஞ்சுவைக் கொண்டு வா! சுபத்திரை!

சுப:—(கோபமாய்) அவள் வரமாட்டாள்!

குஞ்:—இதோ, வருகிறேன்!...—.........

துரை:—பழங்களை இங்குக் கொண்டுவா—பார்க்கலாம்!

மாயா:—சாமியாருக்கு உணவு பழங்கள்தானே. ஓகோ, சரிதான்—நீங்கள் சொன்னது பொய்யன்று, தெரிகிறது!

உரு:—சுபத்திரை—நீயும் பார்க்க வேண்டாமா, தட்டை இங்குக் கொணர்கிறேன், சாமியாரடியில் சமர்ப்பிக்க!

சுப:—அஞ்சி இருக்கலாம், ஆரஞ்சு இருக்கலாம்; ஆனுல் மா ஆப்பிள் பலா இருக்கின்றன என்பது பொய்! இது காலமன்று!

மாயா:—நானும் கூடையைத் தூக்க வரட்டுமா?

[மறைகிருன்]

சுப:—குஞ்சு!—மாமாவைத் தேடவேண்டாமா?

துரை:—(சுபத்திரையை நோக்கி) ஏன் தேடணும்?

சுப:—ஏனென்ருல்? மாமா!

துரை:—அவன் உனக்கென்ன உறவு?

சுப:—ஒரு உறவு மில்லை...ஆனுல்...

(கையில் ஒரு பழத்துடன் மாயாண்டி வருகிருன்)

மாயா:—ஹா ஹா! பேஷ்! கட்டிமாம்பழம்—எத்தனை பெரியது—தின்னவே மனம் வரவில்லை!—ஐயையோ விளக்கு அவிந்துவிட்டதே...பாருங்கள்!—என்ன ஜனக்கூட்டம்!

சுப:—(சிரித்துக் கொண்டு) முழுதும் கொட்டை.

குஞ்:—எனக்கு, எனக்கு?

மாயா:—அவரைக்கேள்—இது எனக்கு!

[உருமபிள்ளை தட்டுடன் வருகிருன்]

உரு:—அதை அவளுக்குக் கொடு.

மாயா:—தந்தேன்!...எனக்குத் தாருங்கள் ஒன்று!

சுப:—பட்டிக் காட்டானே!—அது...சாமியாரே அவனுக்குப் புத்திசொல்லுங்களேன்!...

குஞ்:—(மாயாண்டி கையிலிருந்து வாங்கின பழத்தைக் கடித்து) கடிக்கவே முடியவில்லை—ஐயையோ—காய், சீ! (தூக்கி எறிகிருள்)

மாயா:—பொய்—வாயெல்லாம் சிவப்புரசம் பூசியிருக்கிறது! கொம்பில் கனிந்தபழம்!

சுப:—(சிரிப்பை அடக்க முடியாமல்) கடித்துத்தின்ற....சீ—எச்சில்எச்சில்!

மாயா:—எச்சிலே என் பங்கு எப்பொழுதும்!

உரு:—என்னடா ஆர்ப்பாடம் அங்கே—பழம் சும்மா கிடைக்கிறதோ, அவள் சொன்னுளே—காலமில்லாக்காலம்...கிராக்கிவிலை....

மாயா:—அஞ்சி காட்டுங்கள்!

உரு:—இதோ அஞ்சி!

மாயா:—அடடா—என் பெண்டாட்டி பிள்ளைகள் இவைகளைத் தின்ன என்ன ஆசைப்படுவர்- இன்னும் பத்துநாள் இவைகள் அழுகாமலிருக்குமா?

சுப:—(சிரிப்பு அடக்கமுடியாமல்) நூறு நாள்களுமிருக்கும்!—வா, குஞ்சு! மழை வரும்போலிருக்கிறது; இருட்டு; மரங்களுக்கு அடியிலிங்கே பயந்து கொண்டால்! (பிடித்திழுக்கிருள்)

மாயா:—நூறுநாள் இருக்குமா பழம், அதெப்படி!

உரு:—நூறு நாள் இருக்காது ... அழுகும் ... மேலே கம்பற்பூச்சி பெற்று இருக்கும். ... எங்கே போகிருய்? குஞ்சுவுக்கு மீண்டும் மந்திரிக்கவேணுமாம்! சாமியார் ஏன் தன் தொழுகையைத் துவக்காமல் காத்திருக்கிருர்?

மாயா:—எல்லாவற்றையும் வாங்கிக்கொள்கிறேன்-விலை என்ன?

சுப:—மாயாண்டி! பாட்டி உன்னை அழைக்கிருள் பார் - வா!

உரு:—இல்லையே!

மாயா:—இல்லையே!

உரு:—பொய் சொல்கின்ருள்—நான்வாங்கினவிலை பத்தே முக்காலே வீசம்! இந்த 12 பழங்கள்—

மாயா:—பன்னிரண்டையும் வாங்கிக்கொள்கிறேன்.

குஞ்:—எனக்கு வேண்டாமடி அம்மா!

உரு:—இதென்ன தெரியுமா—ஸ்ட்ரா பெர்ரி!—

மாயா:—நாங்கள் கேள்விப்பட்டதே யில்லை!

சுப:—அப்படிச் சொல்லாதே—விஷப்பழமா இது அவன் சாக?

மாயா:—இந்தப்பழம் விஷமா? வேண்டாம்! வேண்டாம்!!

உரு:—சீ! இதுவும் பொன்னுட்டுக் கனியே!—பத்து ரூபாய் கணக்காய் எண்ணி விடு—எடுத்துக் கொள் இவைகளை!—முதலில் ரூபாய்...

மாயா:—சரி—போய் ரூபாய் எடுத்துவருகிறேன்.

[மச்சேறுகிறான்]

குஞ்:—ஐயையோ—மச்சே நினைவில்லையே இத்தனை நாள்! அம்மா! அங்கிருக்கிருளோ?—பணம் அவளைக் கேட்கப் போகிருனு—அம்மா! அம்மா! வா, கீழே!

[மச்சேறுகையில்]

சுப:—இரு, நானும்வருகிறேன்—வழுக்கிவிழாமல் ஏறு! [பின்தொடர்ந்தேறி இருவரும் மறைந்தபின்]

உரு:—துரைசிங்கா! என்ன- வாயைவிட்டுக்கேட்டுவிடு—கொஞ்சம் தெரியும் மெஸ்மெரிஸம் என்றெண்ணினேன்—உன் கை இங்குச் செல்லவில்லை—கொடுக்கிறதாகச் சொன்ன தொகையைக் கேட்டுவிடு—தைரியமாய்—

துரை:—நான் கேட்பதாக நீ சொல்லிப் பிடுங்கு பணத்தை. நான் சாமியார் ஆகையால் பணப்பேச் செடுக்கக் கூடாதல்லவா?

—•—

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[567-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச்சருக்கம்

299. படையின தமைதி கூழின்
பகுதியென் றிவற்றின் பண்மாண்
புடையவ ரவனோ டொப்பார்
ஒருவர்மற் றில்லை வேந்தே
விடயமொன் றின்றி வென்ற
விடுசுட ராழி யாளும்
நடையவ னுவப்பின் ஞாலம்
பிறருழை நடப்ப தென்றான். 62.

வேந்தே - அரசனே, படையினது அமைதி - சேனையின் மாண்பும், கூழின் பகுதி - பொருளின் இயல்பும், என்ற இவற்றின் - என்ற இவை போன்ற அரசியலின் அங்கங்களின், பல்மாண்பு உடையவர் - பலவகை மாட்சிமைகளையும் உடைய அரசர்களில், அவனோடு ஒப்பார் மற்று ஒருவர் இல்லை- அவனுக்குச் சமானமானவர்கள் வேறொருவரும் இல்லை. விடயம் ஒன்று இன்றி வென்ற - காரணம் எதுவுமின்றிப் பிறமன்னரை வென்ற, விடுசுடர் ஆழி ஆளும் நடையவன் - ஒளியை வீசும் சக்கரத்தை உருட்டி அரசாளும்தொழிலினுகிய அம்மன்னவன், உவப்பின்-மனமுவந்து அனுமதிகொடுத்தலாலேதான், ஞாலம் - இவ்வுலகத்தின் சிலபாகம், பிறர் உழை நடப்பது - வேற்று மன்னரின் ஆளுகைக்கு உட்பட்டு நடக்கின்றது, என்றான் - என்று சொன்னான்.

கூழ் - உணவுப்பொருள், இங்கே,

படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும்
உடையான் அரசருள் ஏறு. (திருக்குறள்)

என்ற இடத்திற்போலப் பொதுவாகப் 'பொருள்' என்பதைக் குறித்து நின்றது. விடயம் - விஷயம், காரணம். உவப்பு - இங்கே ஆகுபெயர்.

———

300. ஆணை நூ லமைச்ச னாவான்
அரிமஞ்சு அவன தாற்றல்
கோணை நூற் பவரைத் தன்சொற்
குறிப்பின்மே னிறுத்த வல்லான்
பேணுநூ னிமித்தம் வல்லான்
சதவிந்து பெரிய நீரான்
காணுநூற் புலமை யாருங்
காண்பவ ரில்லை கண்டாய். 63.

ஆணை நூல் அமைச்சன் ஆவான் - அவனுக்கு மெய்ம்மையான நூல்களைக் கற்றுணர்ந்த மந்திரியாய் இருப்பவன், அரிமஞ்சு - அரிமஞ்சு என்பவன். அவனது ஆற்றல் - அவனுடைய சாமர்த்தியம் எத்தன்மையதென்ருல், கோணை நூற்பவரை-நீங்கு இழைப்பவரை, தன்சொல் குறிப்பின்மேல் - தனது சொற்குறிப்பின்வழி, நிறுத்தவல்லான் - அடங்கி நிற்கச் செய்ய வல்லவன். பேணும் நிமித்தநூல் வல்லான் - விரும்பிப் போற்றப்படும் சகுன சாத்திரத்தில் நிபுணனுய் அம்மன்னனுக்கு நிமித்திகனுய் இருப்பவன், சதவிந்து - சதவிந்து என்னும் பெயரை உடையவன்; பெரிய நீரான் - அந்த அறிவிற் பெரிய தன்மையனுடைய, காணும் நூல் புலமை - கற்றுணரத்தக்க நூல்களின் கல்வித்திறத்தை, காண்பவர் யாரும் இல்லை - அளவிட்டு அறியத்தக்கவர் ஒருவரும் இல்லை.

கோண் - வளைவு; ஒழுங்கற்றசெயல், கோணை-கோட்டணை, கொடுமை என்றுங் கொள்ளலாம்.

———

301. தன்னலாற் றெய்வம் பேணார்
சார்ந்தவர் தானுஞ் சார்ந்தார்க்
கென்னலா லிவருக் குற்றார்
இல்லையென் றிரங்கு நீரான்
பொன்னெலா நெதிய மாகப்
பொழிந்திடு கின்ற பூமி
மன்னெலாம் அவனை யன்றி
வணங்குவ தில்லை மன்னா. 64.

மன்னா - மன்னவ, சார்ந்தவர் - அவனை அண்டிய வர், தன் அல்லால் தெய்வம் பேணார் - அவனையன்றிப் பிறதெய்வங்களைப் போற்றமாட்டார், தானும் - அவனும், சார்ந்தார்க்கு 'என் அல்லால் இவருக்கு உற்றா இல்லை' என்று - என்னை வந்தடைந்த இவருக்கு என் னையன்றிப் பொருந்திய உறவினர் வேறெவரு இல்லையே' என்று, இரங்கு நீரான் - இரங்கிப் போற் றுந் தகைமையினன். பொன் எல்லாம்-பொன்னையே நெதியம் ஆக - நிதியாக, பொழிந்திடுகின்ற பூமி மன் எல்லாம் - பொழிகின்ற பூமிக்கு அரசராய் உள்ளா எல்லாம், அவனை அன்றி வணங்குவது இல்லை - அ னையன்றி வேறெவரையும் வணங்குவது இல்லை.

நெதியம் - நெதி, நிதி.

———

302. குளிறுவா ளுழுவை யன்னான்
குமாரகா லத்து முன்னே
களிறுநூ றெடுக்க லாகாக்
கற்றிரள் கடகக் கையால்
ஒளிறுவா ளுழுவ னேந்தி
உருட்டிவட் டாட வன்றே
வெளிறிலாக் கேள்வி யானை
விஞ்சைய ரஞ்சி யிட்டார். 65.

குளிறு - கர்ச்சிக்கின்ற, வாள் உழுவை அன்னான் - கொடிய புலியை ஒத்தவனாகிய அந்த அசுவக்கிரீவன், குமார காலத்து முன்னே - பாலியப்பருவத்துக்குமுந்தியே, நூறுகளிறு எடுக்கல் ஆகா கல் திரள் - நூறு யானைகள் ஒன்றுகூடித் தூக்கமுடியாத கற்பாறையை, கடகம் கையால் - தனது கடகம் அணிந்த கையால், ஒளிறு வாள் உழுவன் - பிரகாசிக்கும் வாள் வீரனாகிய அவன், ஏந்தி - எடுத்து, உருட்டி வட்டு ஆட - உண்டை உருட்டும் விளையாட்டாக உருட்டி ஆடக் கண்டு, அன்றே - அப்பொழுதே, வெளிறு இலா கேள்வி யானை - அறிவின்மை யில்லாத நல்ல கேள்விஞானமுடைய அவனை, விஞ்சையர் அஞ்சியிட்டார் - வித்தியாதரரெல்லாம் பயந்திட்டார்கள்.

குளிறுதல் - கத்துதல், கர்ச்சித்தல். வெளிறு - அறிவின்மை, உள்ளீடின்மை.

---

303. முற்றவ முடைமை யாலே
மூரிநீ ருலக மெல்லாம்
மற்றவ னேவல் கேளா
மன்னவ ரில்லை, மன்னா;
செற்றவ னலித லஞ்சித்
திறைகொடுத் தறிவித் தன்றே
நற்றவ நங்கை தோன்று
முன்னநாம் ஆண்ட தெல்லாம். 66.

மன்னா - அரசனே, முன்தவம் உடைமையாலே - முற்பிறப்பிலே அவன் செய்துள்ள தவத்தாலே, மூரிநீர் உலகம் எல்லாம் - கடலாற் சூழப்பட்ட உலகமெங்கும், அவன் ஏவல் கேளா - அவன் பணித்த ஏவலைக் கேட்டு அதன்படி நடவாத, மன்னவர் இல்லை - அரசர்கள் ஒருவரும் இல்லை; நல் தவம் நங்கை தோன்று முன்னம் - நாம் செய்துள்ள நல்ல தவத்தின்பயனாய்ப் பிறந்த மகளாகிய சுயம்பிரபை பிறப்பதற்கு முந்தி, நாம் ஆண்டது எல்லாம் - நாம் அரசாண்டதும், செற்று அவன் நலிதல் அஞ்சி; நம்மை அவன் கோபித்து வருத்துவதற்கு அஞ்சி, திறை கொடுத்து - அவனுக்குக் கப்பங்கட்டி, அறிவித்து - நாம் அவனதாட்சிக்கு உட்பட்டவர் என்பதைத் தெரிவித்து, அன்றே - அல்லவா? மற்று, அசை.

---

304. ஈங்குநங் குலக்கொம் பொப்பாள்
பிறந்தபி னினிய னாகித்
தேங்கம ழலங்கல் வேலோன்
திறைகொள லொழிந்து செல்லும்
ஆங்கவன் திறங்க ளெல்லாம்
அறிதியால் ஆணை வேந்தே
தீங்கியான் உணர்த்திற் றுண்டோ
திருவடி தெளிக வென்றான். 67.

ஆணை வேந்தே - ஆஞ்ஞாசக்கரத்தைச் செலுத்தும் வேந்தே, தேன்கமழ் அலங்கல் வேலோன் - தேன் மணக்கும் மாலையை யணிந்த வேலை யேந்திய அம்மன்னன், ஈங்கு - இங்கே, நம் குலக்கொம்பு ஒப்பாள் - நமது குலத்துக்குக் கொள்கொம்பு போன்றவளாகிய நங்கை, பிறந்தபின் - பிறந்தபிறகு, இனியனாகி - நம்மிடத்து அன்புடையனாகி, திறைகொளல் ஒழிந்து செல்லும் - கப்பம் வாங்குதல் தவிர்ந்தான். அவன் திறங்கள் எல்லாம் - அவனுடைய குணாதிசயங்களை எல்லாம், அறிதி - நீ அறிந்துள்ளாய். தீங்கு யான் உணர்த்திற்று உண்டோ? - எப்பொழுதேனும் தீங்கான யோசனையை நான் சொன்னது உண்டோ? திருவடி தெளிக - தேவரீர் ஆராய்ந்து தேறுக; என்றான்—, (ஆங்கு, அசை)

---

305. மற்றவற் குரிய ணங்கை
என்பதென் மனத்தி னூடும்
உற்றுவந் துளது சால
உறுதியு முடைய தொக்கும்;
வெற்றிவேல் விஞ்சை யோரும்
அஞ்சுவர் மின்செய் பைம்பூண்
கொற்றவ குறிப்புண் டாயிற்
கொடுப்பது குணங்கொள் என்றான். 68.

மின்செய் பைம்பூண் கொற்றவ - ஒளியை வீசும் பசும்பொன்னாலாகிய ஆபரணங்களை அணிந்த மன்னவனே, நங்கை அவனுக்கு உரியள் என்பது - நம் மகள் அவனுடைய மனைவியாதற்கு உரியவள் என்பது, என் மனத்தின் ஊடும் உற்று வந்து உளது - எனது மனதிற்குப் பொருந்திய எண்ணமாகத் தோன்றுகின்றது; சால உறுதியும் உடையது - மிகவும் நன்மையைப் பயப்பதும் ஆகும்; ஒக்கும் - (எல்லா வகையாலும்) பொருத்தமுடையதும் ஆகும்; வெற்றிவேல் விஞ்சையோரும் அஞ்சுவர் - வெற்றி வேலையுடைய வித்தியாதாரர்களும் உன்னை அஞ்சி அடங்கி நடப்பார்கள். குறிப்பு உண்டாயின் (இவளை மணந்துகொள்ளும்) விருப்பம்(அவனுக்கு) இருக்குமானால், கொடுப்பது குணம் - மணம்புரிந்து கொடுப்பது நலம். கொள் - இதனை நீ அங்கீகரிப்பாயாக, என்றான்—.(மற்று, அசை).

---

306. சுடர்மணி மருங்குப் பைங்கட்
சுளிமுகக் களிநல் யானை
அடர்மணிக் கதிரும் பைம்பொன்
மாலையு மணிந்த சென்னித்
தொடர்மணிப் பூணி னாற்குச்
சுச்சுதன் சொல்லக் கேட்டே
படர்மணிப் படலை மாலைப்
பவச்சுதன் பகர லுற்றான். 69.

சுடர்மணி மருங்கு பசுமை கண் சுளிமுகம் - ஒளி பொருந்திய மணிகள் தொங்கவிட்ட பக்கங்களையும் பசுமையான கண்களையும் கோபிக்கும் முகத்தையும் உடைய, களி நல் யானை - மதங்கொண்ட நல்ல இலக்கணங்களை உடைய யானைப் படையையும், அடர் மணி கதிரும் பசுமைபொன் மாலையும் அணிந்த சென்னி - நெருங்கிய ரத்தினங்களின் கிரணங்களையும் செம்பொன்னாற் செய்த மாலையையும் சூடிய தலையையும், தொடர் மணி பூணினாற்கு - வரிசையாக இழைத்த ரத்தினாபரணங்களையும் உடைய மன்னனுக்கு, சுச்சுதன் சொல்ல - இவ்வாறு சுச்சுதன் சொல்ல, கேட்டு - அதைக் கேட்டுப் பின்பு, படர் மணிப் படலை மாலைப் பவச்சுதன் - ஒளிபரவும் மணிகளின் திரளைக்கொண்ட மாலையை அணிந்த பவச்சுதன், பகரல் உற்றான் - தன் கருத்தைச் சொல்லத் தொடங்கினான்.

ஊழ்வினையும் ஆள்வினையும்

[569-வது பக்கத் தொடர்ச்சி].

ஊழ்வலியின் தத்துவத்தைக் கம்பநாட்டடிகள் வசிட்டர்கருத்தில்வைத்துக்கூறுவதைக்காண்போம். கானகஞ்செல்ல மரவுரிதரித்து ஆயத்தமாயிருக்குங் கார்வண்ணனைக் கண்ட வசிட்டமாமுனிவர்,

ஊழ்வினை நுதலிய மங் கலத்துநாள்
தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினான்
சூழ்வினை நான்முகத் தொருவற் காயினும்
ஊழ்வினை யொருவரா லொழிக்கற் பாலதோ.

என்று கூறி வருந்துகின்றார்.

இத்தகைய காரணங்களை நோக்குழி அவரவர்கள் முன்செய்த நல்வினை அல்வினைப் பயன்களை அனுபவித்தேதீரவேண்டுமென்பது தேற்றம். நாம் முற்பிறப்பில் நல்லன செய்தோம் அல்லது தீயனசெய்தோம் என்று அறிவதற்கும், இனிவரும் பிறப்பில் நல்லன நுகர்வோம் தீயன நுகர்வோம் என்றறிவதற்கும் ஏற்ற சோதிடம் ஒன்று ஜைனமுனிவர் அருளுகின்றார்.

இறந்த பிறப்பிற்றான் செய்த வினைப்
பிறந்த பிறப்பா லறிக—பிறந்திருந்து
செய்யும் வினையா லறிக இனிப்பிறந்
தெய்தும் வினையின் பயன். என்பதாம்.

ஆதலால் நாம் முன்செய்த ஊழினை அனுபவித்தே தீரவேண்டும். இப்போதுசெய்வன பின் அனுபவித்தே ஆகவேண்டும். " மனிதன் சம்சார துக்கத்தினின்றும் விலகும்வரையில் எப்பொழுதாயினும் தான் செய்த புண்ணியம் (தன்பலத்தை அவனுக்குக் கொடுப்பதற்கு வழிசெய்து கொண்டு) திண்ணமா யிருக்கும்'' என்று மகாபாரதம் (சாந்திபர்வம் 290 - 17) பராசரகீதத்தில் சொல்லப்படுகின்றது. நம்வினைக்கேற்பவே நமக்கு வரும், மனைவி மக்கள் வீடு மாடு பொருள் அனைத்தும் பொருந்தியிருக்கும். இவைகளில் ஏதேனுங் குறை யிருக்குமேல் அவைகளை எவ்வாறு நிறைவு படுத்தவியலும் என்று உபாயந்தேடி அவ்வாறுசெய்து உள்ளவரை அனுபவிக்கக் கடமைப் பட்டவர்களேயன்றித் தீங்குளதென்று நாம் அவைகளை விலக்கிவிடவோ விலகிவிடவோ செய்தால்பின்னரும் வினைகளை அனுபவிக்க நிருத்திக்கொண்டவர்களேயாவோம். அவைகளால்தீங்கு நேருமாயினும் வருந்துவது அறியாமை. மனைவிபோ மற்றெவரோ நமக்கு ஒத்து வாராராயின் இயன்றவரையிலும் திருத்தி இல்லறம் செய்தலே நேரிது. பெருந் தீங்கா யிருப்பினும், முற்பிறப்பில்நாம் அவர்களுக்குத் தீமை செய்திருத்தல் கூடுமென்றும் அக்கடன் அவர்களால் கழிக்கப்படுகின்றது என்றும் உவத்தலேநலம். அல்லது நம்முன்னோரேனும் பெருந்தீங்கு புரிந்திருக்கலாம், அதற்காக நாம் இவ்வாறு அனுபவிக்கிறோம் என்று உன்னல் உசிதம். பாரம்பரியமாக ஒருகுலத்தில் வியாதி தொடர்ந்துவருவதும் பிள்ளைப் பேறின்மை தொடர்ந்துவருவதும் காண்கின்றோம். இதனால், எந்தை தந்தை தந்தை தம்மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி இவர்களில் எவரோ செய்தவினை அவரவர்தம் பிறவியைத் தொடர்வதுந் தவிர, அம்மரபிலேயே வருவதும் உண்டு. அங்ஙனம் வருவது தீவினை மாத்திரமன்று; நல்வினையு மப்படியே. "ஓ அரசே! யாருக்காயினும் தம் பாவகர்மப் பயன் தன் அனுபவத்துக்கு வாராதுபோனாலும் அது அவர்கள் மகனுக்கோ மகன்மகனுக்கோ அவன் மகனுக்கோ அனுபவிக்கவேண்டி வரும்'' என்று மகாபாரதத்தில் (சாந்தி பர்வம் 129.) பீஷ்மர் தருமருக்கு அருளுகின்றார். ஆதலால் தீங்குபுரியும் ஒருவன் தன்னையுங் கெடுத்துத் தன் குலத்தையுங் கெடுக்கின்றான். நன்மைசெய்பவனும் அவ்வாறே தனக்கும் தன்குலத்துளோர்க்கும் நன்மைபாற்றினவனாவான். பொருள் சேர்ப்பதிலேயும் முயற்சியின் காரணமாக ஒருவரோ அவர் முன்னோரோ அதற்கேற்ற வினை செய்துளரேல் வாராது நில்லாது. அதைப் பெயர்க்க எவராலும் இயலாது. இல்லாததற்கு எத்தனை அரும்பாடு படினும் எய்தா.

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தாம்

ஆதலால் கல்வியிலும், எளிதில் ஒருவர் கற்று முன்னேறின ரென்னின், வினைத்துணை யில்லாமலன்று. பல பிறவிகளில் அரும்பாடுபட்டே இப்பிறவியில் பெரும் புலவராகவோ மேலோராகவோ மதிக்கப்படுகின்றனர். அஃதில்லாதாரே தாழ்ந்தவராக எண்ணப்படுகிறார்கள். இத்தத்துவ மறிந்த தக்கோர் "பெரியோரென்று மகிழ்தலு மிலமே சிறியாரென்றிகழ்தலும் இலமே' என்றிருப்பர். வினை யிவ்வாறு இயங்குகின்ற தென்பதற்கு உலகை நோக்குவோமானால் புலனாகாதுபோகாது. பொருள்சேர்க்க விரும்பாத மகன் ஒருவனுமில்லை. அனைவரும் பொருளாளிகளா யிருக்கவுமில்லை. தொகை கணக்கிடும் அறிவும் குறிக்கக் கல்வியுமில்லாதவன் தனவந்தனாயிருக்கிறான். பேரறிவாளன் பெருந்தரித்திரனா யிருக்கிறான். ஒருவன் நெட்டையாயிருக்கிறான். ஒருவன் குட்டையாயிருக்கிறான். ஒருவன் நொண்டியாய்ப் பிறக்கிறான். ஒருவன் முண்டமாய்ப் பிறக்கிறான். ஒருவன் கறுத்துளான். ஒருவன் சிவந்துளான். ஒருவன் உடற்கூறு ஒவ்வொன்றும் புண்ணாகும்படி உழைத்தும் உணவுக்கு அலைகிறான். ஒருவன் ஒன்றுஞ் செய்யாது உயர் மாளிகையில் ஊசலாடுகிறான். ஒருவன் பாந்துபடித்தும் பரீக்ஷையில் தவறுகின்றான். இவைகளுக்குக் காரணம் வினையென்றால் எவரே மறுப்பர். அறிவாளி அறிவின் திறத்தால் பொருள் சேர்க்கவேண்டியிருக்க வறுமையால் வருந்துகின்றான். அஃதில்லாதான் பொருளுடையவனா யிருப்பதற்குக் காரணம் அறிவும்அறிவில்லாமையுமன்று, என்பது தெரிவிப்பார்போல்'இருவேறு உலகத்தியற்கை, திருவேறு தெள்ளியராதலும் வேறு' என்று நாயனார் கூறுகின்றார்.

குயவன் திகிரிபோல் இன்னபடி என்று இயம்பவியலாது சுழன்றுகொண்டிருக்கும் ஊழைப்பற்றி உறுதியாய் உரைக்க இயலாதென்று கண்ணன் கழறினதுந் தவிர, அந்நூலுக்குப் பெரியதொரு அரிய உரை வகுக்கவந்த கர்மயோகி திலகாசார்யரே மயங்கினாரென்றால் எவரால் வகுத்துரைக்க முடியும்.

"ஊழா மியந்திரம் உந்துமாறெல்லாம் உலவுகின்றேன், நான் என்செய்குவன்'' என்று தீயன புரிவோன் தெரிவிப்பானானால் அவன் அறிவில்லாதானே. அவ்

வாருயின், திருக்குறள், கீதை, பாரதம், மனுதர்மம், பர்த்ருஹரி, முதலான நூல்கள் வேண்டா. விதிவில க்கு வேண்டா. ஊழின் உண்மை அறியாதார் மயங் கும் இடம் இதுவாகும். இதைப்பற்றியே நாம் சிறிது இங்கு விளக்கவேண்டியவராகின்றேம். அதன் முன் நாம் "கலா நிலயம்" திருவாளர் ஆசிரியரவர்கள், வால். 1. நம், 26; பக்கம் 510-ல். "ஷண்முகநாதன் அல்லது தனவைசிய மைனர்" என்னுங் கதையின் 'மதிப்புரை'யில் ஊழைப்பற்றி விளக்கியுள்ள பொன் னெழுத்துக்களைப் போற்றி வரைவாம்.

"ஒருத்தி சோரபுருடனைத் தன் பள்ளியறையி லேற்று விபசாரம் செய்கின்ற சந்தர்ப்பத்தை இவ் வாசிரியர் மிகுந்த ஆர்வத்தோடும், வர்ணனை நயங்க ளோடும் விரித்துரைத்து 'என் செயலாம்! ஊழிற் பெருவலி யாவுள' எனப் பருத்தஎழுத்தில் நேட்டு யிர்ப்பு வீங்குவார். அவரவர் படுகின்ற அடாநெறிக் கெல்லாம் அவரவர் ஊழ்தான் காரணம் என்று கூறு வதைவிட ஆபத்து வேறு வேண்டா. மற்றுத் தீவினை செய்கின்றவர்கள் செய்வது அவரது ஊழினுலேயே ஆயின் நாம் 'சீர்திருத்துவதற்கு' என்ன இருக்கின்றது. ஊழைத் திருத்துவார் யாருளர்? குடிப்பவன் தன் ஊழினுலே குடிப்பான். விபசாரம் செய்கின்றவள் தன் ஊழினுலே கெடுகின்றுள். செல்வத்தைத் தீநெறியில் செலவுசெய்கின்ற 'மைனர்' அவன் ஊழி னுலே செய்கின்றுன். எல்லாம் அவ்வாறே. ஊழிற் பெருவலி யாவுள எனின், இந்நாவ லென்ன, திருக் குறளே ஒருவரையும் செம்மைப் படுத்த வியலாது. தீத்தொழில் புரிவாரும் 'இது தீமையே அறிவேன்; 'ஊழிற் பெருவலி யாவுள' ஆதலின், நான் செய்ய வேண்டியிருக்கின்றது' என்று சொல்லிச் செய்து கொண்டே வரவேண்டியவராகின்றனர். ஊழின் தத் துவம் இதுவன்று. சுருங்கச்சொல்லின் "ஒவ்வொரு வரும் மனதோடுசெய்யும் செய்கைகளின் பொறுப்பு அவரதே, ஊழினதன்று. அதனுல் எய்தும் பயன் ஊழினது" என்பதே ஊழின் கொள்கை. இவ் விஷயங்களெல்லாம் நன்கு ஆராய்ந்தபின் அவை களை எடுத்தாள நினைப்பது நலமாம். இந்நூலின் ஆசிரியர் இவைகளை அறிந்திரார் என்றுநாம்கூறவர வில்லை. அவரறிந்ததை ஐயந்திரிபில்லா வகையில் பிறர்கொள்ளுமாறு அமைக்க வேண்டுமென்பதே எமது வேண்டுகோள்."

இதுவரையில்தான் நமக்கு வேண்டிய பாகம். இப் பகுதியாலேயே ஊழின் தத்துவம் பெரிதும் புலனு கும். வெள்ளத்தில் விழுந்தோன் விரிகடல் சேர்தல் விளக்கமேனும் கரையேறுதற்கு 'நீந்துதல்' ஒன் றுண்டல்லவா? அதுபோல் ஓயாது தன்வழிக் கசை க்கும் ஊழின் பயனை நுகர்தலினூடே தன்கருத்தின் வண்ணம் ஆற்றலுக் கேற்றவாறு செய்யும் உரிமை ஒன்றிருக்கின்றது. அவ்வுரிமையை நாம் ஆக்குமாறு நல்லாராயிருக்க வேண்டும். ஊழின் பயனை எவ்வகை யிலும் உண்ணப்போவது திண்ணம்.

அப்பர்

அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்.

28. அதிரிசயம்

[575-வது பக்கத் தொடர்ச்சி]

இக்கலையைத் தாயுமானவர் "வேறொருவர் காணுது உலகத்து உலாவுவது" என்பர். முன்னமே மூலி கைகள் முதலிய தந்திரங்களால் கண்ணுக்குப் புலப் படாது இயங்கக்கூடு மென்பதைக் காட்டினேம். ஆயினும் தமிழ்நாட்டில் சித்தமார்க்கத்தில் சன்மார்க் கங் கடைப்பிடித்த யோகிகள் * இதனை எவ்வாறு பயன்படுத்தினரென்பது சற்று ஆராய்வோம்:—

உலகத்தில், கண்கட்டுவித்தையென்று இக்காலத் திலும் தொம்பரவர் முதலிய கூத்தாடிகள் தெருக் களில் இல்வசமாய்ச் செய்வன பார்க்காதவர் சிலரே. பிறர்தாம் இல்லாத பொருளைக் காண்பதற்கும் உள்ள பொருளைக் காணுதிருப்பதற்கும் யாதோ தந்திரம் செ ய்வது. இதைப் "பொய் செய்வது" † என்று நமது சம யாசாரிகள் இழித்துக்கூறுவது முண்டு‡ கண்ணுக்குப் புலப்படாது பழிவாங்கத் தொடர்ந்த பேய்மகள் வஞ் சனையா லொருவணிகனைக் கொன்று, அவள் சார்பா கப்பேசி உயிரைக் கொடுப்போ மென்ற வேளாளர் பலர் உயிர்கொண்டதும் இவ்வதிசயக் கலையின் பய னே யன்றே? அதைத் திருவாலங்காட்டுப் பதிகத் தில் சம்பந்தர் குறிப்பது காண்க:—

துஞ்ச வருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்பாரு முனைநட்பாய்
வஞ்சப் படுத்தொருத்திவாணுள்கொள்ளும்வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங்காட்டெம் மடிகளே.
திருவாலங்காடு - பண் - தக்கராகம் 1.

* பொய்மே செய்து புறம்புறமே
திரிவேன் றன்னைப் போகாமே
மெய்யே வந்திங் கெனையாண்ட
மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே
பையா டரவ மரைக்கசைத்த
பரமா பழைய னூர்மேய
ஐயா வாலங் காடாவுன்
னடியார்க் கடியே னுவேனே.
சுந்தரர்.

† வைத்த பொருணமக்கா மென்றுசொல்லி மனத்தடைத்துச்
சித்தமொருக்கிச் சிவாய நமவென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதிபோல் வாரவர் பாதிரிப்புலியூர்
அத்தனருள் பெறலாமோ வறிவிலாப் பேதைநெஞ்சே.
திருப்பாதிரிப்புலியூர் - திருவிருத்தம் 5.

‡ பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்த நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றும்மமு தாயவ னேகம்பம்
குறிப்பி னுற்சென்று கூடித் தொழுதுமே.
திருக்கச்சியேகம்பம் - திருக்குறுந்தொகை 4.

ஆயினும் இவ்வாறு துன்பம் பிறருக்கு இழைக்க வேனும், அல்லது வேடிக்கை காட்டுவதற்கேனும் மகாத்துமாக்களானமேலோர் இக்கலையிற் பழகவில்லை. பொய்திகழும் உலகநடையில் யாதொரு சம்பந்தமின் றித் தாங்கள் உலகத்தில் உயிருடனிருந்து மேலான ஞானசாதனங்களைச் செய்திட விரும்புவோர்க்குப் பலர் இடையூறு செய்வது வழக்கம். * கெட்ட எண் ணத்துடன் பாமரசனங்கள் இவர்களுக்குத் துன்பம் விளைவிப்பதில்லையாயினும், ஒரு பெரியார், மகான் என்று சற்றுத்தெரிந்தமாத்திரமே கும்பல்கும்பலாய்த் திரண்டு பலர் அவரை வணங்குவதும் வரங்கேட்பது மாய் நிற்பது இக்காலத்திலும் காண்கின்றோமன்றே? ஆதலால் அவ்வாறு மனிதர் கண்களுக்குப் புலப்ப டாது$ தாம்உலகத்தில்திரிவாராகின் யாதொருஇடை யூறும் நேராதென்பதைத் தெரிந்து ஞானநிலைக்கு ‡ வரும் யோகிகள், இக்கலையின் சாதனத்தால் பெரும்பா லும் எவருக்கும் புலப்படாதிருப்பர். சிவபெருமானை முறைப்படிப் பஞ்சாக்ஷரத்தால் செபிப்பவர் உருவ மும் உயிரும் தமது வசத்தில் வைக்கக் கூடியவராவர். இம் மாட்சிமையை யெண்ணியே, அப்பர் சிவபெரு மானை.*

உருவமு முயிருமாகி யோதிய வுலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்றவெம் பெருமான்

எனத் திருவண்ணுமலைப்பதிகத்தில் பாடியதிலும், அத் திருப்பதியின்கண்ணே சம்பந்தர், "உருவிற் றிகழும் உமையாள் கணவன்" என்று கூறியதிலும்,

வந்தித்திருக்கு மடியார் தங்கள் வருமேல் வினையோடு
பந்தித் திருந்த பாவம் தீர்க்கும் பரமனுறை கோயில்
முந்தியெழுந்த முழவினேசை முதுகல் வரைகண்மேல்
அந்திப் பிறைவந் தணையுஞ் சார லண்ணு மலையாரே.
திருவண்ணுமலை - பண் - தக்கேசி. 7.

என்னும் பாசுரத்திலும், ஒருவாறு குறிப்பிடப்பட் டது. "ஊனத்திரள்" சேரா தொழிவதற்கே இக்கலை யைச் சிவஞானத்தில் ஈடுபடும் யோகிகள் ‡ அநுஷ்டித் தன ரென்று அநுமானிக்கலாகும்.

உளங்கொள் போக முய்த்திடா
ருடம்பிழந்த போதின்கண்
துளங்கி நின்று நாடொறுந்
துயரலாழி நெஞ்சமே
வளங்கொள் பெண்ணை வந்துலாம்
வயல்கள் சூழ்ந்த கோவலூர்
விளங்கு கோவ ணத்தினன்
வீரட்டானஞ் சேர்துமே.
சம்பந்தர்.

துறவில் நெஞ்சையிருத்திய தொண்டர்கள் பிறவி நீங்கத்தக்க ஏதுக்களைத் தேடுவதற்குக் கலைகள்பயின் றுறன்றி வேறில்லை. ஓதா நாவன் திறத்தை யுரைப் பில், எதுவாகினும் இனியதாகுமென்று விளக்கிய திருநாவுக்கரசு நம்மனேரை நோக்கி,

பூக்தாடிக் கழியாதேநீர் பூமியீர்!
நித்தா டித்திறஞ் சிந்தையுள் வைம்மினே

என்றும்

காமியஞ் செய்து காலங் கழியாதே
போமியஞ் செய்நங் குள்ளத் துணர்மினே
சாமி யோடு சரச்சுவதி யவள்
கோமியும் முறையுங் குட மூக்கிலே.
திருக்குடமூக்கு, திருக்குறுந்தொகை 9.

என்றும் பாடுகின்ற பாசுரங்களா லறிக.

சிவபெருமான் தன்னை யறியொணுது மறைந்திருப் பது இக்கலையின் மாட்சிமையென்னலாகும். அவ்வாறு மறைந்திருப்ப தவன் திருக்கருணையின் குணமன்றோ?

ஒள்ளி யாரிவ ரன்றிமற் றில்லையென்
றுள்கி யுள்கி யுகந்திருந் தேனுக்குத்
தெள்ளி யாரிவர் போலத்திரு வாய்மூர்க்
கள்ளி யாரவர் போலக் கரந்ததே.
திருவாய்மூர்-திருக்குறுந் தொகை. 5.

சிவபெருமான் யாவருக்கும் புலப்பட்டுக்கொண்டு சதா பிரத்தியக்ஷமா யிருப்பாரெனில், இவர்கள் அப்பரமன் திருவுருவத்தை * மதியாது தீநெறி யில் செல்ல நேருமென் றெண்ணியோ, அல்லது வருந்தி யடைந்தாலன்றி, அப்பேரின்ப வாழ்வு அத்துணைச் சிறப்பாகாதென் றெண்ணியோ யாவ ருக்கும் காணுெணுது யாவரையும் ஆட்டுவிக்கின் றனர். அப்பரைப்போன்ற ஆர்வம் பெற்றாலன்றி

* உள்ளத்தீரே போதுமின் னுறுதியாவ தறிதிரேல்
அள்ளற் சேற்றிற் காலிட்டிங் கவலத்துள் ளழுந்தாதே
கொள்ளப் பாடு கீதத்தான் குழகன் கோவலூர் தனுள்
வெள்ளந் தாங்கு சடையினன் வீரட்டானம் சேர்துமே.
சம்பந்தர்.

$ வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலா
மஞ்ச லென்றிரு வானைக்கா வண்ணலே.
திருவானைக்கா—திருக்குறுந்தொகை 5.

‡ பொய் யனைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்ய னைச்சுடர் வெண்மழு வேந்திய
கைய னைக்கச்சி யேகம்ப மேவிய
ஐய னைத்தொழு வார்க்கில்லை யல்லலே.
திருக்கச்சியேகம்பம்—திருக்குறுந்தொகை 9.

• முத்தீ யாக வொருதவம் செய்திலை
யத்தி யாலடி யார் கொன் றறிதிலை
தொத்து நின்றலர் சோற்றுத் துறையர்க்கே
பத்தி யாற்பணி செய்மட நெஞ்சமே.
திருச்சோற்றுத்துறை - திருக்குறுந்தொகை 2,

‡ சிரமர் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரம னைப்பல நாளும் பயிற்றுமின்
பரமன் மாலொடு மற்றெழிந் தார்க்கெலாம்
குரவ னுருறை யுங்குட மூக்கிலே.
திருக்குடமூக்கு - திருக்குறுந்தொகை 9.

* குற்றம் கூடிக் குணம்பல கூடாதீர்
மற்றும் தீவினை செய்தன மாய்க்கலாம்
புற்ற ரவினன் பூவனூ ரீசன்
கற்று வாழ்த்து கழிவதன் முன்னமே.
திருப்பூவனூர்—திருக்குறுந்தொகை 3.
கண்ணி றைந்த கனபவ ளத்திரள்
விண்ணி றைந்த விரிசுடர்ச் சோதியான்
உண்ணி றைந்துரு வாயுயி ராயவன்
எண்ணி றைந்த வெறும்பியூ ரீசனே.
திருவெறும்பியூர் திருக்குறுந்தொகை 9.

அவன் போர்வையை நீக்கிக் காணப்பெறேம். அவ்வார் வம் திருவதிகை வீரட்டானத்திலே பாடிய அவர் பதி கங்களிற் காணலாம்.

கோணன் மாமதி சூடியோர் கோவண
நாணில் வாழ்க்கை நயந்து பயனிலே
பாணில் வீணை பயின்றவன் வீரட்டம்
காணி னல்லதென் கண்டுயில் கொள்ளுமே.

உவந்தார் வெண்தலை யூன்கல ஞகவே
வலந்தான் பிக்கவன் வாளரக் கன்றனைச்
சிலம்பார் சேவடி யூன்றினான் வீரட்டம்
புலம்பெ ஞகிலென் கண்டுயில் கொள்ளுமே.

திருவதிகை வீரட்டானம் - திருக்குறுந்தொகை.

அவ்வாறு கண் துயிலற்று மனமொத்துச் சிந்தித்து வாழ்வதின் பயன் யாதெனின்:—

மூப்பி னோடு முனிவுறுத் தெந்தமை
யாப்ப தன்முன் னணியம ரர்க்கிறை
காப்ப தாய கடிபொழி லேகம்பஞ்
சேர்ப்ப தாகநாஞ் சென்றடைந் துய்துமே.

பொய்ய னைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்ய னைச்சுடர் வெண்மழு வேந்திய
கைய னைக்கச்சி யேகம்ப மேவிய
ஐய னைத்தொழு வார்க்கில்லை யல்லலே.

திருவேகம்பம் - திருக்குறுந்தொகை 7 & 9.

யாப்பிலக்கணம்

செய்யுள்—வெண்பா

[571-வது பக்கத் தொடர்ச்சி]

செப்பலோசை உடையதாகி, இயற்சீர் நான்கும், மூவசைச் சீர்களில் காயீற்று நான்கு சீர்களும் பெற்று, வெண்டளையன்றி வேற்றுத்தளை வருவதின்றி, ஈற்றடி முச்சீரடியாய் மற்ற அடிகள் நாற்சீரடிகள் கொண்டு, நாள் மலர் காசு பிறப்பு என்னும் வாய்பாடுகளில் ஒன்றினால் முடியும்படி அமையும் வெண்பாக்கள், அடிகளின் எண்ணிக்கையாலும் தொடைகளின் விகற்பங்களாலும் ஓசையினாலும் ஐவகைப்பட்டுப் பெயர் வேறுபாட்டுடன் வழங்கப்பெறும். அவை, குறள்வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, என்பனவாம்.

குறள் வெண்பா

வெண்பாவிற்குரிய இலக்கணங்களெல்லாம் பெற்று இரண்டே அடிகளையுடையதாய்வருஞ்செய்யுள் குறள் வெண்பா எனப்படும்.

இரண்டு சீர்களையுடைய அடியைக் குறளடிஎன்பது போல், இரண்டு அடிகளை உடைய வெண்பாவைக் குறள் வெண்பா என்பர்.

வெண்பாவிற் கெல்லாம் ஈற்றடி சிந்தடியா யிருக்க வேண்டுமாதலால், இரண்டடிகளுடைய குறள்வெண்பாவின் முதலடி நாற்சீருடைய அளவடியாகவும், இரண்டாவதடி முச்சீருடைய சிந்தடியாகவும் இருக்கும்.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

என்பது முதல்

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்

என்பது ஈருக உள்ள, திருக்குறள் நூலின் 1330 பாட்டுக்களும் குறள் வெண்பாக்களே.

குறள்வெண்பா, ஒரு விகற்பத்தாலும் வரலாம், இருவிகற்பத்தாலும் வரலாம். இவ்விகற்பம் தொடையின் வேறுபாட்டைப்பற்றி நிகழ்வது.

முதலடிக்கும் இரண்டாமடிக்கும் அடிமோனை அடியெதுகை அடிமுரண் அடியியைபு அடியளபெடை ஆகிய இவ்வைந்து தொடைகளில் ஒன்று அமைந்திருக்குமாயின், ஒருவிகற்பக் குறள்வெண்பாவாகும். அவ் வடித்தொடை யொன்றும் அமையாதாயின், இருவிகற்பக் குறள்வெண்பா வாகும்.

இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்

என்னுமிக் குறளின் முதலடியில், இகலென்ப - எல்லா, என் இணைமோனையும், இகலென்ப - பகலென்னும், என ஒரூஉ எதுகையும்; இரண்டாமடியில், பண்பின்மை - பாரிக்கு, என இணைமோனையும் அமைந்திருக்கின்றன. ஆனால், இவ்விரண்டடிகளின் முதற்சீர் முதலெழுத்துக்கள் ஒன்றவில்லை - ஆகையால், அடிமோனை இல்லை. இரண்டா மெழுத்துக்கள் ஒன்றவில்லை - ஆகையால், அடி யெதுகையில்லை. முதலடியின் முதற்சீரும் இரண்டாமடியின் முதற்சீரும் சொல்லாலேனும் பொருளாலேனும் மாறுபட நிற்கவில்லை—ஆகையால் அடிமுரண் இல்லை. அவ்விரண்டு சீர்களிலும் எழுத்துக்கள் அளபெடுக்கவில்லை — ஆதலால், அடியளபெடை யில்லை. இவ்விரண்டு அடிகளின் ஈற்று எழுத்துக்களேனும் சீர்களேனும் ஒன்றவில்லை—ஆதலால் அடியியைபுத்தொடையுமில்லை. எனவே, இக் குறள்வெண்பா முதலடி ஒரு விகற்பமும் மற்ற அடி வேறுவிகற்பமும் அமையப் பெற்றிருத்தலால், இது இருவிகற்பக் குறள்வெண்பா வாகும். இவ்வாறே,

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்

போன்று அடித்தொடை யாவுமின்றி அமைவன இருவிகற்பக் குறள்வெண்பாக்களாம். பின்வருவன ஒரு விகற்பக் குறள்வெண்பாக்களுக்கு உதாரணங்கள்:—

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

இதனில், ம—வ, என வொன்றி அடி மோனை அமைந்திருக்கின்றது.—(மூன்ரு மெழுத்து ஒன்றிய அடியெதுகை உளதெனினும் அமையும்)

அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

அடி யெதுகை அமைந்து ஒரு விகற்பமாயது.

கேடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

அடிமுரண் அமைந்து ஒருவிகற்ப மாயது.

மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற.

கடிகை நுதன்மடவாள் சொல்லுங் கரும்பு
கதிர்வளைத் தோளுங் கரும்பு.

அடிகளின் ஈற்றெழுத்துக்களும், ஈற்றுச்சீராகியசொற்களும் ஒன்றி அடியியைபுத்தொடை அமைந்ததால் இவை, ஒருவிகற்பக் குறள்வெண்பாக்க ளாயின.

ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.

அடியளபெடை அமைந்து ஒரு விகற்பமாயது.

இனி, ஐந்துவகைப்பட்ட அடித்தொடையினால் அமைகின்ற ஒரு விகற்பக் குறள்வெண்பாவை, இனக் குறள் வெண்பா வென்றும்; அவையின்றி வரும் இரு விகற்பக் குறள்வெண்பாவை, விகற்பக் குறள்வெண்பா வென்றும், அழைப்பதும் உண்டு. செந்தொடையால் வரும் குறள்வெண்பாவும் விகற்பக் குறள்வெண்பாவில் அடங்கும்.

சிந்தியல் வெண்பா.

வெண்பாவிற் குரிய பொது இலக்கணங்கள் எல்லாம் அமையப் பெற்று மூன்று அடிகளுடையதாய் வருவது சிந்தியல் வெண்பா. மூன்ருமடி சிந்தடியாய், நாள் மலர் காசு பிறப்பு என்னும் வாய்பாடுகளில் ஒன்றினால் முடியவேண்டுமென்பது, எல்லாவெண்பாக்களையும் போல் இச் சிந்தியல்வெண்பாக்களுக்கும் இன்றியமையாததே. மற்ற இரண்டு அடிகளும் அளவடிகளாயிருக்கும்.

சிந்தியல் வெண்பா, குறள்வெண்பாவைப் போல், தொடையமைப்பிற் கேற்றவாறு ஒருவிகற்பத்தாலும் இருவிகற்பத்தாலும் பலவிகற்பங்களாலும் வாலாம்.

கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தாள் செயலென்னே—யெங்
பங்குற்றுந் தீரா பசப்பு. [கோமான்

இதன்கணுள்ள மூன்று அடிகளும், ஓரே அடியெதுகைத் தொடை பெற்றிருப்பதால், இச் சிந்தியல் வெண்பா ஒரு விகற்பத்தால் வந்தது.

கம்பக் கடாக் களிற்றின் கபாயணிந்த
அம்பொற் புபத்தார்க் கமைதந்தா—லம்பை
முலையானைக் கோடணிந்த மார்பு.

இதனில், முதலிரண்டடிகளும் கம்ப—அம்பொ, என அடியெதுகைபெற்று ஒரு விகற்பமாயும், மூன்ருமடி அவ்வாறு அடியெதுகை பெறுமல் மற்ருேர் விகற்பமாயும் அமைந்திருத்தலால், இச்சிந்தியல் வெண்பா இருவிகற்ப முடையது.

முல்லை முறுவலித்துக் காட்டின மெல்லவே
சேயிதழ்க் காந்த டுப்பீன்ற போயினர்
திண்டேர் வரவுரைக்குங் கார்.

இதனில் மூன்று அடிகளும் அடித்தொடை யாதும் பெறுமல் தனித்தனி விகற்பித்து நிற்றலால், இதுபல விகற்பச் சிந்தியல் வெண்பா.

எல்லா வெண்பாக்களையும் போல் சிந்[illegible] பாவிற்கும் உரிய ஓசை செப்பலோ[illegible]லோசை, ஏந்திசை தூங்கிசை ஒழுகிசை என்னுமிவைகளில் ஒன்ருகலாம். இவ்வாறு ஆவதுடன், சில பாட்டுக்கள் இளகியமென்மை யுடையனவாகவும், சில பாட்டுக்கள் இறுகிய வன்மை யுடையனவாகவும், தோன்றக்கூடும்.

உம்பர் பெருமாற் கொளிர்சடிலம் பொன்பூத்த
தம்பொற் புயம்வேட்டேந் தார்முலையும் பொன்பூத்த
பொன்பூத்த பூங்கொன்றை சூழ்ந்து.

என்னும் சிந்தியல் வெண்பாவையும்,

கருமிடற்றன் செஞ்சடையன் வெண்ணீற்றனென்னு
மழுவலத்தன் பின்னிடத்த னென்னு—முழுவலத்த
மன்றுடையான் ருர்வேட்ட மான்.

என்னும் சிந்தியல் வெண்பாவையும் ஓதிப்பாருங்கள். இவை இரண்டும் மிகுதியும் வெண்சீர் வெண்டளைகளே பெற்று ஏந்திசைச் செப்பலோசையுடையன. எனினும், "உம்பர் பெருமாற்" எனும் முதல் வெண்பா, இளகி நெகிழ்ந்து செல்லும் மெல்லிய தன்மை தோன்ற ஒலிப்பதும், 'கருமிடற்றன்' என்னும் மற்றைய வெண்பா, இறுகிச் செறிந்திருக்கும் வலிய தன்மைதோன்ற ஒலிப்பதும் புலப்படும். இளகி நெகிழ்ந்திருப்பதை இன்னிசை என்றும், இறுகிச் செறிந்திருப்பதை நேரிசையென்றும், அழைப்பர்.

ஆகையால், ஒருவிகற்பத்தாலும் இருவிகற்பத்தாலும் பலவிகற்பத்தாலும் வரக்கூடிய சிந்தியல் வெண்பாக்கள் இன்னிசைச் சிந்தியல் வெண்பா வென்றும் நேரிசைச் சிந்தியல் வெண்பா வென்றும் இருவகைப் படும்.

- சிந்தியல் வெண்பா
  - இன்னிசைச் சிந்தியல் வெண்பா
    - ஒரு விகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா
    - இருவிகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா
  - நேரிசைச் சிந்தியல் வெண்பா
    - ஒரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா
    - இரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா
    - பல விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா

ஒரு விகற்பம், அல்லது, இரண்டுவிகற்பம் உடைய சிந்தியல் வெண்பாவின் இரண்டாவது அடியின் நான்காம்சீர் அவ்வடியின் முதற்சீரோடு ஒரூஉ எதுகையாயமைந்து, அதற்கு முன்னின்ற மூன்ருஞ் சீரோடு ஒலித்தொடர்பினால் முற்றிலும் இணையாமல் சிறிது விட்டிசைக்குமானால், அது நேரிசைச் சிந்தியல் வெண்பாவாகும். இப்படி விட்டிசைக்கும் சீரைத் தனிச்சொல் என்பர். ஏனெனில், முதலிரண்டடிகளில் தொடர்ந்துவந்த பொருள் சிறிது மாறி மூன்ருமடியின் பொருளைத் துவக்குவதற்கு ஆதாரமாய பொருள் தரக்கூடியதாயிருக்கும், இரண்டா மடியின் ஈற்றில் ஒரூஉஎதுகையுடன் நிற்கும் அந்தச் சீர். ஒரு பொருளினின்று வேருேர் பொருளிற்கு மாறுகின்றதென்பதற்கு அடையாளமாகத் தனிச்சொல் என்னப்படும் அவ்விரண்டாமடியின் ஈற்றுச்சீர் முன்பின் சீர்களினின்று சிறிது விட்டும் இசைக்கின்றது. (தனிச் சொல், என்னப் பெயர் பெறினும் அச்சீரில் ஒன்றிற்கு மேற்பட்ட சொற்களும் இருக்கலாம்).

இ[illegible]ரண்டாமடியின் ஈற்றில் தனிச் சொல் [illegible]ால் நடக்கும் வெண்பா, நேரிசைச்

188928

சிந்தியல் வெண்பாவாகும். அது தனிச்சொல் என்று காட்டுவதற்குத்தான், அதனையும் அதன் முன்சீரையும் ஒரு கோடிட்டுப் பிரிப்பது வழக்கமாகின்றது. அத்தனிச்சொல் எப்பொழுதும் அவ்வடியின் முதற்சீரோடு ஒரூஉ எதுகையாகவேண்டியது அவசியம். அதுவுமன்றி அவ்வெண்பா, ஒரு விகற்பத்தாலேனும் இரு விகற்பத்தாலேனும் வருதல் வேண்டும். பல விகற்பத்தால் வருதல் ஆகாது.

இவ்வாறின்றி மற்றப்படிவரும் மூன்றடி வெண்பாக்களெல்லாம் இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனக் கொள்க.

> கேளா திருந்திலேன் கேசவா வென்பதனை
> வாளா விருந்திலேன் வாழ்த்தினே—ளானேர்க்
> காளானே னென்னிணையிங் கார்.

இதனில், கேளா - வாளா - காளா, என மூன்றடிகளும் அடியெதுகை பெற்றிருப்பதால், இது ஒருவிகற்பமுடையது. இரண்டாவதடியில், வாளா-ளா, என முதற்சீறும் நான்காஞ்சீறும் இரண்டா மெழுத்து ஒன்றி ஒரூஉ எதுகை ஆயின. 'ஆளானேர் என்னும் அத்தனிச்சொல் பொருளாலும் ஓசையாலும் விட்டிசைப்பதையும் உணர்க. எனவே இச்செய்யுள், ஒரு விகற்ப நேரிசைச் சிந்தியல்வெண்பா, ஆகும்.

> நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
> சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே-பொற்றேரான் -
> பாலைநல் வாயின் மகள்.

இதனில், முதலிரண்டடிகளும் அடியெதுகை பெற்று ஒரு விகற்பமாயும், மூன்றுவதடி வேறு விகற்பமாயும் அமைந்திருப்பதால், இவ்வெண்பா இரு விகற்பமுடையது. இரண்டாமடி, 'பொற்றேரான்' என்னுந் தனிச்சொல் ஒரூஉ எதுகையுடன் அமையப் பெற்றிருக்கின்றது. ஆகையால், இது இருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பாவாகும்.

'ஆளானேர், பொற்றேரான், என்னு மிச்சீர்களில் இரண்டு சொற்களிருப்பனும், ஒருசொல்போல் அமைந்து, இசையாலும் பொருளாலும் முன் சீரோடு சிறிது மாறிநிற்றலால், அச்சீர் தனிச்சொல் என அழைக்கப்படுகின்றது. தனிச்சீர், என அழைப்பினும் அமையும்.

குறிப்பு:—இரண்டாமடி தனிச்சொல் பெற்றுவரினும், பல விகற்பத்தால் அமைந்த சிந்தியல் வெண்பா நேரிசையாகாது.

பெண்களின் பேதைமை

இயற்கையே இறைவனது நிறைவென்றும், இயற்கையின் எழிலே இறைவனது உருவென்றும், இயற்கையைக் கண்டு வியக்குந்தோறும் பயக்கும் இன்பமே எவ்வின்பத்திலும் தலையென்றும், இயற்கை நிகழ்த்தும் நெறியே இறைவனது நெறியென்றும், எனவே அவ்வியற்கைநலத்தோடு இசைய இசைந்து வாழ்பவரே படைப்பினது பண்பின் பயனறிந்து ஒழுகும் இன்புடையோரென்றும் கூறுங் கொள்கையைச் சொல்லளவிலேனும் மறுப்பார் இவ்வுலகில் எவருமிலர். இயற்கைநலத்தோடு கூடி வாழும் வாழ்வே வாழ்வெனின் அவ்வியற்கைநலம் பல பெரிதும் கவிந்துநிற்கும் பொருள் எதுவென்று நோக்குங்கால் பெண்மக்களென்றே எம்மக்களும் கூறுவர். ஐயநுண்ணிடைத் தையலார்தம் அழகின் நுட்பம் யாரே அறிவர்? குழலியர் அழகினை, உண்ணின்ற ஆண்டவன்தன் ஒளிவடிவெனக் களிகொள்வதைவிடுத்து மடவார்தம் உடலின் வளமென மயங்கி அவர் மயக்கவலையிற் றயங்குதல் கயமையின்பாற் பட்டதே. "மாதரைக் காதற்கழிவிடமென் றெண்ணி அவர்தம் இடையை நோக்குவதைவிடுத்து அவர்களை அண்ணலின் அன்புநிலையாம் பெண்ணென்று அறிய வேண்டுமென்ற" நுண்ணியஉரை நோக்கற்பாலதே. பெண்மக்கள்தம் அகத்தேயுள்ள இறைவன் திறமாகிய அறிவுவிளக்காம் அழகுகொண்டு நம்மை இறைவனேடு இயைத்தலும் கூடும். இவைகளை நோக்கியே மாறுபட்ட சமயத்தோரும் வேறுபடாது நல்லறமென்று நயக்கும் இல்லறத்திற்குப் பெண்மக்கள் இன்றியமையாதவர் என்பர். இத்தகைய மாதரார்க்குப் பேதையர் என்று பட்டம்கட்டியது எம்மட்டில் பொருந்துமென்பதை இக்கட்டுரையின்கண் ஆராய்வாம் :

"பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்னுமோர் அரிய அறவுரை யாவர்தம் வாயிலும் காற்றாய் உலாவுவதைக் காண்கின்றோம். எக்கருத்துடன் இவ்வுரையை யாவரும் கையாளுகின்றனர் என்பதைக் கவனிக்குமிடத்து "மாதர் யாவரும் அறிவில்லாமாக்கள்" என்று எண்ணத்தக்கதோர் கருத்தே கொள்ளக் கிடைக்கின்றது. எண்ணறக் கற்பினும் எழுத்தற ஓதினும் "பெண்புத்தி என்பது பெரும் பேதைமைத்தே" என்ற ஓர் உரை உண்டாயதும் இக்கருத்தை அறிவுறுத்தும் ஒரு சாரார் கொள்கையே போலும்.

மாதர் தம் மனத்தினிடத்து ஒருபுறத்தே சிறிதளவு மயக்கமும் தியக்கமும் உடையவராயினும், அதன் ஆழத்தே தெளிவும் உறுதியும் அன்பும் உடையவராவர். எவ்வகையிலும் இடசித்தமும் நோக்கத்திற்கேற்ற கருமமும் கருமத்திற்கேற்ற ஒழுக்கமும் கையாள்பவர் மைவிழியாரே. தனக்கென வாழுந் தன்மையையுடையநம்மைப் பிறர்க்கென அன்புபாராட்டச்செய்பவர் மாதரே. பொறுமையையும் அமைதியையும் புகட்டி நம் சிந்தையைத் தெளிவிப்பவரும் பைந்தொடியாரே. பந்தமுறும் மாந்தரின் சிந்தையைச் சாந்திசெய்வோரும் ஏந்திழையாரே. காதலிலேனும் கற்பிலேனும் மற்றும் ஏனைய ஒன்றைச் செய்யப்புகினும் சமய சாமர்த்தியமாக நடந்துகொள்ள வல்லவர் மடந்தையரே. ஆடவரோ மிகவும் மிடுக்கான நிலைகளில் மனமொன்று எண்ண வாயொன்று பேசக் கையொன்று செய்ய மெய்யொன்று சாரக் கண்ணென்று நோக்கக் கிடந்துழல்வர். இவர்கள் பிடிக்கும் பிள்ளையாரெல்லாம் குரங்காகவே முடியும்.

இதிகாசங்களில் ஒன்றாகிய இராமாயணத்தை எடுத்துக் கொள்வோம். கைகேசியின்முன் தசரதன் பேதையாகின்றான், சீதைக்குமுன் இராமன், பொய்மானல் பிரிந்தபோதும் பின்னர்ச் சிறைதவிர்த்துச் சேர்ந்தபோதும் பேதையாகின்றான். நிந்தனையிலா ஐந்தாம்வேதமெனக்கொண்டாடப்படும் பாரதத்தைப் பார்க்கின், பாஞ்சாலியின்முன் பாண்டவர் பல்வேறிடங்களில் பேதையராவதைக் காணலாம். சாவித்திரியின்முன்னர் ஆவி

கவர்வோன் பேதையானதும் பேசத்தக்கதே. தேய சரித்திர நூற்களை நோக்கின், எவ்வளவோ அறிவும் ஆண்மையும் வாய்ந்த ஆண்டகையோரும் பெண்டிரிடம் பேதையரான பெட்புத் தோன்றும். நிகழ்கால வாழ்க்கையில் எண்ணிறந்த ஆடவர், பெண்டிர்முன் பேதையராவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

பன்னயம் கெழுமிய நன்னயப் பாக்கள் பலவுள புறநானூற்றில் கூறியுள்ள, "போர்க்குச் சென்ற தன் தந்தையும் தலைவனும் அந்தகனூர் அடைந்தனர்" என்றதைக் கேட்டும் சற்றும் வாட்டமுறாது பால் மணமறாத மைந்தனையும் பாசறைக்கனுப்பிய பாவையின் செய்தியையும், "செல்வச் சிறுவன் செருவில் மாய்ந்தான்" என்று செவியுற்ற தாயொருத்தி "முதுகில் வடுவுண்டிருப்பின் முலையது துணிப்பன்" என்று உருவியவாளுடன் போர்க்களம் ஓடிய செய்தியையும் கேட்டு யார்தான் பெண்களைப் பேதையர் என்று அழைக்க ஒருப்படுவர். ஆ! என்ன வீரம், என்ன திடசித்தம், என்ன உறுதி. முல்லைநிலத்துறையும் இல்லாளொருத்தி தன் கொழுநனுக்கு அட்டிற்றொழில் புரியும் ஓவியத்தைக் கூறும்

> முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
> கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
> குவளை உண்கண் குய்புக்கை கமழத்
> தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
> இனிதெனக் கணவன் உண்டலின்
> நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே.

என்ற செய்யுளைச் சிந்திக்கின், பெண்கள் பேதையராவென்பது நன்கு புலனாகும். கொழுநன் வெளியே போயிருக்கிறான். வருகிற நேரமாகிவிட்டது. அவன் பசியோடுவருவானே என்றுபரிவுடன்விரைவில்சோறு சமைக்கின்றாள். ஏழைக்குடும்பமா? அல்லது, வேறு ஆட்களில்லையா அத்தொழில் புரிய? கலிங்கப்புடவை உடுத்தியிருப்பவளாதலால் ஏழையன்று. மற்றேதோவெனின், தன்னில்லத் துறையும் ஏனையர் செய்யும் அட்டிற்றொழிலால் ஒருசமயம் உணவின்சுவை குன்றித் தன் கொழுநனுக்கு ஏலாததாகி விடுமோ வென்று தானே சமைக்கின்றாள். வேலைசெய்யப் பிறந்தவளா? குவளைப்பூப்போன்ற கண்களையும் காந்தள்பூப்போன்ற மெல்லிய விரல்களையும் உடைய மெல்லியள். அங்ஙனமிருந்தும் தன் கொழுநன்மேலிருக்கும் அன்பினால் அடுப்பூதுகின்றாள்; சட்டி சுரண்டுகின்றாள்; காந்தள்பூப் போன்ற தன் மெல்லிய விரல்களால் கட்டித்தயிரைப் பிசைகின்றாள். எனவே கைவிரல்கள் சிவக்கின்றன. கணவன் வரும் நேரமாகிவிட்டதே என்று விரைவுடன் சமையல்வேலை செய்கின்றாள். அதனால் ஆடை நெகிழ்கின்றது. எடுத்து இடுப்பில் செருகுவதென்றாலோ கையெல்லாம் தயிராக இருக்கின்றது. கைகழுவிச் செருகுவதென்றாலோ காலமாகிவிடும். இன்னுயிர்க்காலதன் இன்னுமாகாதிருப்பது? ஆடை அழுக்கானாலும் ஆகட்டுமென்று அந்தத் தயிர்பிசைந்த கையினாலேயே ஆடையை உடுத்திக்கொள்ளுகின்றாள். பிசைந்த தயிரினைத் தாளிப்புச் செய்யுங்கால் அதனின் றெழும் புகை தன் கண்களில் கப்பிக்கொள்ளுகின்றது. அதற்காக அப்புறம் இப்புறம் திரும்புவாளோ? முகத்தையேனும் சுளிப்பாளா? திரும்பினல் பதங்கெடுமோவென்று குனிந்தது குனிந்த வண்ணமாக அடுப்பிலேற்றியே சட்டியிலேயே கண்ணுங்கருத்துமாக இருக்கின்றாள். பதஞ்சிறிது கெடினும் தன் செல்வக் கொழுநனுக் காகாதென்று பதம்பார்த்து இறக்குகின்றாள். தானே ஆக்கி இறக்கிய அமுதினை அகமுடையான் வயிறார உண்டு "மிக நன்றாக இருக்கின்றது" என்று விருப்புடன் இன்னும் இரண்டுகை இனிதாக உண்பதைக் கண்டு மனமகிழ்கின்றாள். அன்பனது தன்மையைக் கண்டு தலைகீழாகக் குதிக்கின்றாளா? இல்லை. உள்ளுக்குள்ளே இருக்கும் அவள் கூர்களி அவளது நளினமுகத்தில்ஒளிவிட்டுப் பொலிகின்றது. ஆ! என்ன அன்பின் ஆழம்! ஒழுக்கத்தின் உயர்வு! இவ்வாறு தன் உடல் நலத்தைச் சிறிதுமென்னது தன் கொழுநனைப் பெரிதும் பேணி மகிழும் தன்மையை உடைய பெண்களைப் பேதையர் என்று பேசவும் நாவெழுமா? மாதவியையும் கண்ணகியையும் பேதையரென்று பித்தரும் பேசார்.

ஆயிழையார்மாட்டு அறிவினது நுணுக்கம் அமைந்ததுபோல் யாவர்மாட்டும் இல்லவே இல்லை. கல்விக் கடவுளாம் நாமகளைப் பெண்மகளென் றறிந்தவர் பெண்களைப் பேதையர்என்று பேசக்கூசவேண்டாமா? பெண்ணின் இலக்கணத்தைக் கூறவந்த நரைமூதாட்டி, "விறன்மந்திரிமதியும்...பேசில் இவையுடையாள் பெண்" என்றார். மாதரார் மதிக்கு மந்திரிமதியை உவமித்தது மாண்புடைத்தே. வேதத்தை "மறை" என்றதுபோல் அறிவுசால் தெரிவையரைப் பேதையர் என்று நவின்றனர் போலும். ஆழ்ந்த அன்பும், அன்பிற்கேற்ற அறிவும் வாய்ந்த மாதராலேயே இந் நானிலம் நடைபெறுகின்றது என்று கொள்ளலும் மிகையாகாது. பெண்களின் பெருமையின் அருமையைக் கருதாது அவர்களை அவமதிப்பது அறிவுடையோர் செயலன்று. புருஷனைத்தனியாக விட்டுவிட்டால் குரங்கின் கைப் பூமாலையைப்போல் இல்லறவாழ்க்கையை அல்லற வாழ்க்கையாக ஆக்கிவிடுவான். இவ்விதமெனின் "பேதைமை என்பது மாதர்க் கணிகலம்" என்னும் உரையைப் பொய்யுரையாக்கி நகைக்க வேண்டா. அத்தொடரிலுள்ள "அணிகலம்" என்னும் அச்சொல்லே அவ்வுரையை நல்லுரையாக்குகின்றது. எவ்விதமெனில், பெண்மைக்குப்பேதைமை இயற்கையாக அமையாதது. வேண்டும்போது எடுத்தணிய வல்லதோர் அழகுசெய்யும் ஆபரணமேயாகும்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம் — 4. நகர்நீங்கு படலம்.

[573-வது பக்கத் தொடர்ச்சி.]

சோல்லப் படுமோவிச் சோல்

வந்தனன் வசிட்டன் தன்னையுமறந்து நின்றனன். வனத்திற் கேகா'வண்ணம் இராமனை விலக்க முயன்றனன் "நீ பிரியின் மன்னவன் இறப்பான்" என்றியம்பிய வசிட்டனுக்கு, "மன்னவன்பணி தலையேந்திச் செல்வது என்கடன். என் தந்தை இடரை நீக்குதல் நின்கடன்" என இராமன் எதிரியம்பினன். "உண்மையில் மன்னவன் பணியன்று அது" என வசிட்டன் வழங்கிய மாற்றமும் பயன்பட்டிலது. இதுகேட்டு, நல்லறம் நிறுத்தத்தோன்றிய இராமன், "வேந்தன்பாற் பெற்ற வரத்தினுலேயே என் சிற்றனை இது ஏவினுளென்பதற்குச் சான்றெனநின்ற நீ தடுத்தியோ" வென்று கேட்கவே முனிவன் மேலொன் றுரைக்கும் வகையற்றவனுயினன்.

இதன்பின், கண்டோரெல்லாங் கலுழ்ந்துகச் சுற்றிய சீரையோடும் சீதையைக்காணச் சென்றனன். இவ்விடத்தில் வான்மீகி முனிவரோடு கம்பரை ஒப்பு நோக்குதல், இவ்விரு கவிவரர்களின் திறத்தினை எடுத்துக்காட்டுதற்கு ஏற்ற செவ்வியளிக்கின்றது. முதலில், வடமொழி வான்மீகிமுனிவரைப் பின்பற்றுதல் நலம்:—

தருமநெறியிற் பிறழாது நிற்கும் இராமர், காட்டிற்குப் போவதற்காகக் கௌசலையை வணங்கி அவளால் ஸ்வஸ்தியனஞ் செய்யப்பட்டவராய், ஜனங்கள் சூழ்ந்து நிற்கும் இராஜமார்க்கத்தைத் தமது ஒளியால் விளக்கிக்கொண்டு, பண்புடைமையால் மக்களின் மனத்தைக் கலக்கினுர்போலும். அபிஷேகத்தின் பொருட்டு கொண்டவிரதத்துடன் கூடியவளும் இராஜ தருமத்தை யறிந்தவளும் செய்யவேண்டிய மாதிரியை யுணர்ந்தவளும் மகிழ்ந்த மனத்தை யுடையவளுமான சீதாதேவிக்குப் பட்டாபிஷேகந் தடைப்பட்ட சமாசாரந் தெரியாதாகையால், அவள், தன்மனத்தில் தனது கணவருக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறதென்ற எண்ணமுடையவளாய், இஷ்டதேவதைகளுக்குப் பூஜைகளைச்செய்து, தனது பர்த்தாவின் வரவை எதிர்பார்த்திருந்தாள். பின்பு இராமர், வெட்கத்தால் கொஞ்சம் தாழ்ந்த முகத்தினராய், களித்துக்கொண்டிருக்கும் ஜனங்கள் நிரம்பியதும் நன்ருக அலங்கரிக்கப்பட்டிருப்பதுமாகிய தமது மாளிகைக்குட் புகுந்தார். பின்பு சீதை, துக்கத்தால் மெலிவடைந்தவரும் சிந்தையாற் கலங்கிய இந்திரியங்களையுடையவருமான கணவரைப் பார்த்து, தனது ஆசனத்தினின்று எழுந்து நடுநடுங்கி நின்ருள். அவளைக் கண்டவுடன் வெகு தருமாத்மாவாகிய இராமர், மனத்திலிருந்த துக்கத்தைப் பொறுக்கமுடியாதவரானுர்; அதனுல், அத்துயரம் வெளிப்பட்டது.

முககாந்தி குன்றி வேர்வையுண்டாகப்பெற்றுப் பொறுக்கமுடியாத சோகத்தை யடைந்திருந்த தனது பர்த்தாவைக் கண்ட சீதை, வெகு துக்கத்தையடைந்து "மகாபிரபுவே, மகிழ்ச்சி யடையவேண்டிய காலத்தில் துயரப்படுவதேன்? அபிஷேகத்திற்காக ஏற்படுத்தியதும் பிரஹஸ்பதியைத் தெய்வமாகக் கொண்டதுமான புஷ்ய நட்சத்திரம் இன்றைக்குத்தான் என்று நன்குணர்ந்த வேதியர்கள் சொல்லுகிறுர்களே! தாங்கள் என் துக்கப்படுகிறீர்கள்? நீர் நுரைபோல் வெண்மைநிற முள்ளதும், நூறு சலாகைகளையுடையதுமான குடையின்கீழ் தங்களுடைய சுந்தரமான முகம் என் விளங்கவில்லை? நூற்றிதழ்க் கமலத்தையொத்த திருக்கண்களையுடைய தங்கள்முகம், சந்திரன் போலவும் ஹம்ஸம்போலவும் விளங்கும் வெண்சாமரையால் என்வீசப்படவில்லை? புகழ்வதில் வல்ல ஸ்துதிபாடகர்களும் ஸூதர்களும் மாகதர்களும் மனமுவந்து மங்களங்களால் தங்களை என் துதிக்கவில்லை? பட்டாபிஷேகஞ்செய்த தங்களுடைய சிரசில், வேதத்தை நன்குணர்ந்தவர்களான அந்தணர்கள், தேன் தயிர்களை முறைப்படி என் அபிஷேகஞ் செய்யவில்லை? தங்களுடைய அமைச்சர் முதலிய பிரகிருதிகள், அவ்வவ் வீதிகளிலுள்ள முக்கியர்கள், நாட்டார்கள், நகரத்தார்கள் ஆகிய எல்லோரும், ஆடையாபரணங்களினுல் சிங்காரித்துக்கொண்டு, தங்களைப் பின்தொடர்ந்துவர என் விரும்பவில்லை? புஷ்யரதம் என்ற ஒருவகைத் தேர், நன்ருகச் சிங்காரிக்கப்பட்டு வேகமுள்ள நான்கு குதிரைகள் பூட்டப்பெற்றுத் தங்கள் முன் என் ஓடவில்லை? கறுத்தமேகந் தங்கிய குன்றுபோன்றதும் சகல லட்சணங்களும் பொருந்தியதுமான தங்களுடைய பட்டத்து யானை, என் தங்களுடைய பிரயாணத்தில் முன்னே போகவில்லை? அழகிய தோற்றத்தை யுடையீர், வீரர்களால் ஏற்பட்டதும் பொன்வேலை யமைந்ததுமான சிங்காசனம் முன்னர்ச் செல்லவும் தாங்கள் பின் நடக்கவும் காணேன்! அபிஷேகஞ் சித்தமா யிருப்பதா லுண்டாகவேண்டிய அபூர்வமான முகத்தின் நிறமும், மகிழ்ச்சியும் காணப்படவில்லையே!! இதென்ன?" என்று வினவிப் புலம்ப, இராமர் அவளைப்பார்த்து, 'சீதே, பெரியவரான எனது தந்தையார் என்னைக் காட்டுக்கு அனுப்புகின்ருர். உத்தம குலத்திலுதித்தவளே, தருமத்தை நன்ருயறிந்தவளே, தருமந்தவருது நடப்பவளே, ஜானகீ, எவ்வண்ணம் இப்படி வந்ததென்பதைப்பற்றி முறையாகச் சொல்லுகிறேன்; கேள். சத்திய சந்தரும் எனது தந்தையுமான தசரதசக்கரவர்த்தியார், முன்னொருகாலத்தில், எனது தாயாரான கைகேசிக்கு இரண்டு வரங்களைக் கொடுத்திருந்தார். எனக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைக்க அரசர் சித்தராகவிருந்த இப்பொழுது, அவ்வரங்களைக் கைகேயியம்மாள் கேட்க, அத்தந்தையார் தருமத்தால் வெல்லப்பட்டார். அதனுல், நான், பதினன்கு வருஷகாலம் தண்டகவனத்தில் வசிக்கவேண்டும். எனது தந்தையார், பரதனுக்கு இளவரசுபட்டங் கட்டப்போகிருர். நான், உன்னைப்பார்த்துவிட்டு, மனித சஞ்சாரமில்லாத காட்டுக்குப் போகவந்தேன். நீ, பரதன் முன் என்னை ஒருபொழுதும் புகழ்ந்து பேசாதே. புத்தியுடனிருக்கும்புருஷர்கள் பிறருடைய துதியைப்பொருர்கள் அன்றே! ஆகையால், பரதன் முன் என் குணங்களை நீ எடுத்துரைக்க வேண்டாம். நீ, பரதனுல் விசேஷமாக எண்ணிப்போற்றத் தக்கவளன்று. அவனுடைய சமீபத்தில் நீ அநுகூலையாகவே யிருக்கவேண்டும். நெடுங்காலமாக வந்திருக்கும் இந்த இளவரசுப்பட்டம் எனது தந்தையாரால் பரதனுக்குக் கொடுக்கப்பட்டது; ஆகையால், சீதே, பரதன் இப்பொழுது அரசனுகையால், நீ அவனுக்கு அநுகூலையாகவே நடந்துவரவேண்டும். நல்ல மனமுடையவளே, நீ, உன் மனத்தைத் தைரியம் பண்ணிக்கொண்டு இவ்விடத்தில் வசித்திரு. நான் புறப்பட்டு எனது தந்தைசொல்லைக் காப்பாற்ற இப்பொழுதே காட்டுக்குப் போகிறேன். குற்றமற்றவளே, நற்குணமுடையாய், மகரிஷிகள் வசிக்கும் வனத்தில் நான் வசித்துக்கொண்டிருக்கும்போது, நீ, இங்கு விரதங்களையும் உபவாசங்களையும் அநுஷ்டித்துக்கொண்டுவரவேண்டும். தினந்தோறும் காலையில் எழுந்து விதிப்படி தெய்வங்களைப் பூசித்துவிட்டு என் பிதாவாகிய

தசரதசக்ரவர்த்தியை வணங்கிவா. எனது தாயாரான கௌசலைக்கு வயதாய்விட்டது; அன்றியும் அவர், என்னை விட்டுப்பிரிந்த துக்கத்தாலும் மெலிந்துவிடுவர்; ஆகையால் அவருக்குப் பணிவிடை செய்வதுதான் மேலான தருமமென்று நீ கருதுவாய். என்னுடைய மற்றைத் தாய்மார்களையும் நாடோறும் நீ வணங்கிவா. அவர்களெல்லோரும் என்னிடத்தில் சமமான அன்பும் சினேகமும் வைத்து என்னைப் போற்றுகிருர்களன்றே! எனது தம்பியாகிய பரதன் சத்துருக்கனன் இவ்விருவரும் எனக்குப் பிராணனைவிட அதிகமானவர்கள். அவர்களை நீ புதல்வர்போலவும் சகோதரர்போலவும் எண்ணி விசேஷமாகப் பார்த்துக்கொள்வாய். பரதனுக்கு விருப்பமல்லாததை நீ, ஒருபொழுதுஞ் செய்யாதே; ஏனெனில், அவன் தான் குலத்துக்கும் தேசத்துக்கும் அரசன். நன்னடக்கையால் மகிழ்விக்கப்பட்டவராயும் முயற்சியோடு உபசரிக்கப்பட்டவரா யிருக்கும் அரசர் மனமுவந்திருப்பார். விரோதமாய் நடந்தால் கோபிப்பார். அவர், தம் வயிற்றிற்பிறந்த குமாரராலும் தமக்குத் தீங்கு செய்கிறவரென்று கண்டால், விட்டிடுவார். தமக்கு ஒருவிதமான உறவுமில்லாத வேற்று மனிதர்களையுந் தமக்கு அநுகூலராக நடக்கக் கண்டால், சேர்த்துக்கொள்ளுவார். ஆகையால், நீ அரசனுக்கு அநுகூலையாக நடந்துகொண்டு, உனது தருமங்களையும் விரதங்களையும் சரியாகச் செய்பவளாய் இங்குத்தானே வசிப்பாய். நான் காட்டுக்குப் போய்வருகிறேன். நீ இங்குத்தான் இருக்கவேண்டும். நீ ஒருவருக்கும் விருப்பமல்லாததைச் செய்யாததுபோல எனது இந்தச்சொல்லையுந் தவருதுசெய்வாய்" என்ருர்.

விருப்பத்தையே சொல்லத் தக்கவளாயும் எப்பொழுதும் இனிய வசனங்களையே பேசுகிறவளாயு மிருக்குஞ் சீதை, இவ்வாறு தனதுபர்த்தா தன்னைப் பார்த்துச்சொன்னதைக் கேட்டுத் தான் அவர்மேல் வைத்திருந்த அதிக அன்பினுல் கோபமடைந்து அவரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானுள்:—"சக்கரவர்த்தி திருமகரே, நீங்கள் இலேசாகவும் உறுதியாகவும் என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள்? நானும் உங்கள் வார்த்தையைக் கேட்டுப் பரிகசிக்கும்படியாக விருக்கிறது. எனது நாதரே, தந்தை, தாய், சகோதரன், புத்திரன், மருமகள் ஆகிய இவர்களெல்லாரும் தங்கள் தங்கள் புண்ணியபாவங்களின் பயனைத் தாங்களே தனிமையில் அநுபவிக்கிருர்கள். புருஷ சிரேஷ்டரே, மனைவி ஒருத்திதான், தனது கணவன் செய்த புண்ணிய பாவங்களின் பயனைப் பகுத்துக்கொண்டு அநுபவிக்கிருள். ஆகையால், 'காட்டில் வசிக்கவேண்டும் என்று உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை எனக்குங் கொடுக்கப்பட்டது தான். இம்மையிலும் மறுமையிலும் ஸ்திரீக்கு, அவள் தந்தை, பிள்ளை, தாய், தோழிமார் ஆகிய, இவர்கள் கதியாக மாட்டார்கள்; கணவன் ஒருவன் தான் எப்பொழுதும் கதி. ஆகையால் மனிதர்களால் கிட்டுதற்கரிய காட்டுக்குத் தாங்கள் இப்பொழுது புறப்பட்டால், நான் புற்களையும் முட்களையும் மிதித்துக்கொண்டு தங்களுக்கு முன் நடந்து போவேன். 'என்னை அநுசரித்து நடந்தால் இவள் கிருதார்த்தையாய் விடுவாளே' என்று உண்டாகும் பொருமையையும் 'சொன்னபடிகேட்கமாட்டே னென்கிருள்' என்று உண்டாகும் கோபத்தையும், சாஸ்திரத்தில் இழிவுடையதாகச் சொல்லப்படுங் குடித்து மிகுந்த ஜலத்தைப்போல்விட்டுச்சற்றேனும் ஐயப்படாமல் என்னைத் தங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். என்னை விட்டுப் போகும்படியாக நான் ஒருவித பாபமும் பண்ணவில்லையே! பர்த்தா, அரசமாளிகையின் உச்சியிலிருந்தாலும், விமானத்திலூர்ந்து சென்ருலும், யோகபலத்தால் ஆகாயத்திலேயே சென்ருலும், அன்றி வேறு எவ்வித நிலையிலிருந்தாலும் அவனுடைய திருவடி நிழல்தான் மனைவிக்குச் சிறந்தது. என் தாய் தந்தையர்கள் கணவனிடம் நடந்துகொள்ளுவதைப்பற்றி எனக்குநன்ருகக் கற்பித்திருக்கிருர்கள். இப்பொழுது அதைப் பற்றி எனக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. நான் அநேகமிருகங்களின் கூட்டங்களும் புலிகளும் செந்நாய்களுஞ் சஞ்சரிப்பதும் மனித சஞ்சாரமற்றதுமான அடர்ந்தகாட்டுக்குத் தங்களுடன் வருவேன்; இம்மூவுலக ஐசுவரியத்தையும் மதியாமல், கணவருக்குப் பணிவிடை செய்வதிலேயே கருத்துக்கொண்டு, பிறந்த வீட்டில் எவ்வளவு சுகமாகவசிப்பேனே, அவ்வளவு சுகமாக வனத்தில் வசிப்பேன். மகாசூரரே, நான் நியமத்தோடுகூடி ஐம்புலன்களையும் வென்றவளாய், தேன்மணம் வீசிக்கொண்டிருக்குங் காட்டில் தங்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு தங்களுடன் கூடிக் கலந்து மகிழப்போகிறேன். பகைவரின் செருக்கையழிப்பவரே, தாங்கள், காட்டில் வேறு ஜனங்களைக் காப்பாற்றுவதிலும் வல்லமை பெற்றிருக்கிறீர்கள், என்னைக் காப்பாற்றுவதில் வல்லமையைப் பற்றிக் கேட்கவேணுமோ? இப்பொழுதே தங்களுடன் நான் காட்டுக்கு வரப்போகிறேன். இதில் சந்தேகம் சிறிதேனுமில்லை. காட்டிற்குப்போகச் சித்தையாக இருக்கும் என்னைத் தங்களால் தடுக்கமுடியாது. நானும் தங்களைப்போல் தினந்தோறும் கனிகளையும் கிழங்குகளையும் புசிப்பேன். காட்டில் தங்களுடன் நான் வசிப்பதால், தங்களுக்கு ஒருவித சிரமமும் இல்லாதபடி நடந்துகொள்வேன். நான், புத்திமானுயும் கணவராயுமுள்ள தங்களுடன் நதிகளையும், மலைகளையும், ஓடைகளையும், காடுகளையும் பயமில்லாமற் பார்க்க விரும்புகிறேன். ஹம்சங்களும் நீர்ப்பறவைகளும் விளையாடிக்கொண்டிருக்கும் நன்ருய்ப்புஷ்பித்த தாமரையோடைகளைத் தங்களுடன் கண்டு களிக்க நான் ஆசைப்படுகிறேன். நீண்டகண்களை யுடையவரே, அவைகளில் நான், தங்களுடன் தினந்தோறும் ஸ்நானம் பண்ணி விரதங்களை அநுஷ்டித்தவளாய்த்தங்களுடன்கூடிக் கலந்து விளையாடி, தங்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கப் போகிறேன். இவ்வாறு பதினுயிரம் வருஷங் கழிந்தாலும் அதைநான் அறியேன். இவ்வாறிருப்பதை விட்டுச் சுவர்க்கத்தில் வசிப்பதையும் நான் விரும்பவில்லை. எனக்குச் சுவர்க்கங் கிடைத்தாலும் அங்குத் தங்களுடைய சேவைகிடையாதாயின் அச்சுவர்க்கத்தையும் விரும்பேன். நான், அநேக மிருகங்களும், குரங்குகளும், யானைகளுமிருக்கும் புகுதற்கரிய காட்டிற்குத் தங்களுடன் வரப்போகின்றேன். அங்குத் தங்கள் பாதங்களைத் தழுவிக்கொண்டு, எனது தகப்பனுர் வீட்டிலிருப்பதுபோலச் சுகமாகவிருப்பேன். வேறொன்றையுங் கருதாது தங்களிடத்திலேயே ஆசை முழுவதையும் வைத்து, தங்களை விட்டுப்பிரியின் மரணமடைய நிச்சயித்திருக்கும் என்னைத் தாங்கள் அழைத்துப்போகவேண்டும். எனது இவ்வேண்டுகோளை நிறைவேற்றுங்கள். இதனுல் தங்களுக்குச் சிறிதுபாரமும் உண்டாகாது" என்ருள். தருமங்களை நன்ருயுணர்ந்து அவைகளின்மேல் அன்பு பாராட்டிவரும் இராமர், தமது மனைவி இவ்வாறு சொல்லக்கேட்டும் அவளைக் காட்டுக்கு அழைத்துப்போக இஷ்டப்படாமல், அவளுடைய எண்ணத்தை மாற்றும்பொருட்டு, காட்டில் வசிப்பதிலிருக்குங் கஷ்டங்களை வெகுவாகச் சொல்லலானுர்.

பலப் படப்பேசிய இம்மொழிகளினிடையே, அவ்வவர் கருத்தும் மனமும் நோக்கமும் எவ்வாறு அமைந்திருக்கின்றன வென்று காண்பது அருமையன்று.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்நீஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு:—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9 நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப். பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32. மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றுகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினுல் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைக ளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனம் ! இனம் ! !

போஜன விதி

உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

ஏற்படுத்தியது] **நாஷனல்** [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ்	ரூ. 1,13,55,069.
1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு	11,51,813.
பிரீமியம் வரும்படி	30,83,936.
1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி	7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமனவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.

கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்ருவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. 2 0 0
வெளி நாடு „ ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

குறைந்த விலை ! நிறைந்த விஷயம் !
சிறந்த கதை ! உயர்ந்த பதிப்பு !

பாவலர், நாவலர், மற்றி யாவரும் விரும்பும் பாச்சுவை ததும்பப் புதுமை பெற்றிலங்கும்

சுகுணவதி அல்லது
மனம்போல மாங்கலியம்

இனிமை செறிந்த தமிழ் நாவல்

ஸ்ரீமான். மாங்தை. சா. கிருஷ்ணய்யர் எழுதியது.

விலை ரூபா ஒன்றே

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ்,
மைலாப்பூர், மதறஸ்.

:: உயர்தரமாய்ச் செய்திருக்கிறார்கள் ::
அப்படித்தானென ருசுப்படுத்துவது உங்கள் கடன்!

இன்றைக்கு ஒரு கட்டியாவது இரு கட்டிகளடங்கிய ஒரு பெட்டியாவது வாங்குக!

டாக்டர் ட்ராலியின்

- லயன் சோப் -

அதைப்பற்றிச் சொல்லப்படுவதெல்லாம் உண்மையாவென்பதை நீங்களே பரீக்ஷித்துப் பாருங்கள். இது நல்ல முறையான விண்ணப்பம். பெயரை ஞாபகமாக வைத்துக்கொள்ளுங்கள்.

:: எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் ::

சோல் ஏஜண்ட்,
அ. வீர. அ. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு, மதராஸ்.

டாக்டர் நஞ்சுண்டராவ்
பேதீங் ஆயில்.

இந்த எண்ணெயை ஸ்நானத்திற்கு உபயோகித்து வந்தால் மூளைக்குக் குளிர்ச்சியையும் திரேகத்திற்கு ஆரோக்கியத்தையும் ஞாபக சக்தியையும் பெருக்கும். சில கண் சம்பந்தமான வியாதிகளையும் நீக்கிவிடும்.

அல்லது ஸ்நானத் தைலம்
விலை ரூபா 1. எங்கும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.
எம். சி. என்ஸ். பார்மசி, திருவல்லிக்கேணி, மதராஸ்.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய
திரு அருட்பா
வசனப்பகுதி
ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல்
அவர்களது அடக்க விலைப்பதிப்பு.

புஸ்தகவிலை, 4, அணவும், புஸ்தக போஸ்ட் செலவிற்காக, 1 அணவும், ஆக, 5 அண தபால் ஸ்டாம்புகள் அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

கலாநிலயம்—புரசைபாக்கம் சென்னை.

வர்த்தமானம்

காந்தியடிகள் தமது பரிவாரத்துடன் ஆகஸ்டுமாதம் 8-ந் தேதி லண்டனுக்குப் பிரயாணமாவார். அன்னவரை வரவேற்கும் பொருட்டு லண்டனில் சிறப்பான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

***

மதிப்புரை.

அமெரிக்காவில் 'பிலாடெல்பியா' என்னும் ஊரில் வாழும் ஸான்போர்ட் பென்னட் என்பார் ஜீவிய சரித்திரத்தைக் கொண்ட, 'கிழவர் குமரரானார்' என்னும் தலைப்புடைய புத்தகம் வரப்பெற்றோம். இதை ஆக்கியவர் தனவைசியவகுப்பினரான சாண்டோ லெ.சோமசுந்தரம் செட்டியார். உடற்பயிற்சியால் மாந்தர் உறலாகும் நலன்களை எடுத்துக்காட்டும் பொருட்டு இச்சரிதை என்றும் இளமை கிழத்தனமும் இளமையும்,தேகமுயற்சி, ஓர் அற்புதம், இயற்கை என்னும் தலைப்புகளின்கீழ் விளக்கப்பெற்றுளது. இக்கட்டுரைத் தலைவனை ஸான் போர்ட் பென்னெட்டுக்கு இப்பொழுது வயது எழுபதுக்கு மேல் ஆகின்றது, என்றாலும் அவர் 30 வயதும் முற்றாத இளையவன்போல் காணப்படுகின்றனர் என்பதும், அன்னதற்குக் காரணம் உடற்பயிற்சி என்பதும், இச்சரிதையால் நன்கு வற்புறுத்தப்பட்டுளது. இதை வெளியிட, பர்மா, ஐமென் என்னும் ஊரில் இருக்கும் ராம. அ. ராம அவர்கள் பொருளுதவி செய்துள்ளார். இப்புத்தகத்தில் ஸான்போர்ட் பென்னட்டின் உருவப்படமும், ஸ்ரீமான் லெ. சோமசுந்தரம் செட்டியாரின் உருவப்படமும் சேர்க்கப்பட்டுளன. புத்தகம் வேண்டுவோர் ஸ்ரீமான் சோமசுந்தரம் செட்டியார் கீழச்சிவல்பட்டி, இராமநாதபுரம் என்னும் விலாஸத்திற்குஎழுதிபெற்றுக்கொள்ளலாம்.

***

ஸ்ரீ சிரத்தாநந்தர் சரித்திரம்.

ஸ்ரீமான் M.R ஜம்புநாத ஐயரவர்களால் இயற்றப்பட்ட ஸ்ரீஸ்வாமி சிரத்தாநந்தர் ஜீவியசரித்திரம் என்னும் நூல் வரப்பெற்றோம். இந்நூலிற்குத் தமிழ்நாடு பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் டாக்டர் வரதராஜலு நாயிடு அவர்களும், ஸர்வ தேச ஆர்ய ஸமாஜத் தலைவரான மஹாத்மா நாராயணஸ்வாமி அவர்களும் முகவுரையும், சிறப்புரையும் வரைந்துள்ளார்கள். ஸ்வாமி அவர்களின்பிறப்பு வளர்ப்பும்,அவர் வக்கீல் தொழில் ஆற்றியதும், பிறகு மதத்துறையில் ஈடுபட்டுப் படித்துப் பின் அவர் ஸ்ரீ தயானந்த சரஸ்வதி அவர்களின் உபதேசம்பெற்று ஆரியசமாஜியானதும், சந்நியாசம் பூண்டதும், அது முதல் அவர் கல்வித்துறையிலும் சமூகத்துறையிலும் மதத்துறையிலும் அரசியலிலும் ஈடுபட்டுஉழைத்ததும், இறுதியில் முகமதியன் ஒருவனால் சுடப்பெற்று இறந்ததுமான செய்திகளை இந்நூல் நன்கு விளக்குகின்றது. ஸ்ரீ சிரத்தாநந்தர் சரிதையை அறிய அவாவுவோர்க்கு இப்புத்தகம் மிகவும் பயன்படுவதாகும். புத்தகம் 204 பக்கங்களைக் கொண்டது. நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சியற்றப்பெற்றுளது. இப்புத்தகத்தின் விலை அணு 12.வேண்டுவோர் சூடன் அண்கோ, 14, பள்ளியப்பன் தெரு, சௌகார்ப்பேட்டை, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

***

வாழ்த்துப்பா.

(ஸ்ரீசொர்ணமூர்த்தி பெண்பாடசாலை தேவகோட்டை.)

தேவகோட்டை நகரத்தார் உயர்தரப் பாடசாலைத் தமிழாசிரியர் திரு. P. ஆதிமூலன் பாடித்தந்த விருத்தம் :—

திருவோங்கு செல்வர் மிகு தேவகோட்டைப்
பதியில் திகழும் ஒன்றும்
அருளோங்கு கன்னியர்கள் காதலுடன்
கலைகள்பல கற்க வாய்ந்த
தருவோங்குந் தகைமையுடைப் பொன்வண்ணப்
பெண்பாட சாலை தன்னைத்
திருவோங்கு நண்பருடன் சென்றுகாணச்
சீருடனே திகழ்ந்த தம்மா

ஆரம்பக் கல்வியென ஆனந்த
வள்ளுவரைப் பயிலக் கேட்டேன்
வாரங்கொண் டுளமுருக வாசிக்கும்
வசனநடை வழக்க மாறு
வீரங்கொள் தாயை நிகர் விளையாடுங்
கன்னிகை இன்னிசை யினோடு
சீருங்கொண் டோங்குதிரு பாடலோடு
தேசிய கீதம் கேட்டேன்

பாரதத்தாய் வயிற்றுதித்த பண்பாளர்
பற்பலரை அங்குக் கண்டேன்
வேரறுக்க விளங்கிவரும் வியன் ராட்டும்
கையுமாய் விளங்கக் கண்டேன்
போறுத்துப் பிறப்பறுக்கப் பேணி நிற்கும்
பெருமைமிகு ஆசா னுரும்
போரறுத்த பிள்ளை பெயர் முருகனார்
முயற்சிதனை மிகவாக் கண்டேன்.

வாழிதிகழ் பொன்வண்ணப் பெண்பாட சாலைவாழி
வாழி அழ கப்பனென வந்தபெரு வள்ளல் வாழி
வாழிபுகழ் கதராடை வாழிதிரு காந்திபெயர்
வாழிபுவி வாழிபரம் பொருளும் வாழியவே,

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
தித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய் கல்கத்தா.

மதுரை காஞ்சீபுரம்.

188928
3L
N211, N128KN
N31430

KALANILAYAM. REG. NO., M 2324.

:: பிரபல ஜோதிஷர் ::

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

—:வைத்திய ரத்ன :—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898 "ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதரூஸ்.

கேட்லாக் இனாம்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0. கலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. 'கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப் பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T.N- சேஷாசலம் ஐயர் B.A.B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலாநிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

தமிழன்பர்களே! இவரைத் தெரியுமா?

இவரே தற்காலத் தந்தியையும், டெலிபோனையும் கிராமபோனையும், சினிமாவையும், மின்சார விளக்கையும் கண்டுபிடித்தவர். கம்பியில்லாத் தந்திக்கு வழிகாட்டியவர். ஏழைக் குடும்பத்தில் 1847-ல் பிறந்து, தாய் சொல்லிக்கொடுத்த கல்வியினால் பத்திரிகை விற்பவராயிருந்து எண்ணிலாப் புதுமைகளைச் செய்து அமெரிக்காவில் பெருஞ் செல்வராய்த் திகழும்,

தோமாஸ் ஆல்வா எடிசன்

இவருக்கு இப்போது வயது 84. இன்னும் ஊண் உறக்கமின்றிப் புதிய கருவிகளைக் கண்டுபிடித்து வருகின்றார். இப்போது இலைகளினின்றும் ரப்பர் எடுக்க முயற்சிக்கின்றார். இவர் ஹென்ரி போர்டுக்கு நண்பர்.

இவரது வரலாறு படிக்கப்படிக்க இன்பந்தரும். ஆப்டோன் படங்களுடன் உயர்ந்த காகிதம் அழகிய கட்டடம். விலை ரூபா 1-4.

தபாற் செலவு அணா 4.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)